இதழ் 362
25 அக்டோபர் 2025
17 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube. com/@IlakkuWeb2. 0
LIKE US! facebook. com/ilakku. ilakku. 10
FOLLOW US! twitter. com/Ilakku1

# ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை
## புதிய நிபந்தனைகளுடன் இலங்கைக்கு கிடைக்கும்



விதுரன்

# ஈழப்போர் காலத்தில் மறக்கமுடியாத அக்டோபர் மாதம்..!

பா. அரியநேத்திரன்



1987அக்டோபர்



1990அக்டோபர்



1995அக்டோபர்

வேல்ஸில் இருந்து அருஸ்

# ஒற்றைத் துருவ உலக ஒழுங்கு
## போர் இன்றி முடிவுக்கு வருமா?





© 2025 இலக்கு இணையம்

## போர் குற்றங்கள் தொடர்பில் மீண்டும் சர்வதேச விசாரணையை நிராகரிக்கும் அரசாங்கம்!



போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லை என்று அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று (24) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அரசாங்கம் உடன்படவில்லை என்றும் பிரதமர் கூறியுள்ளார். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர், அந்த வாய்ப்பை பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப் படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் என்றும், அந்த செயன்முறையானது, உள்ளக செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வ தேச விசாரணைகளை அரசாங்கம் எதிர்ப்பதாகவும் பிரதமர், பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் நம்பகமான உள்நாட்டு பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச சட்டம் பாலஸ்தீனியர்களின் பக்கம் – ICJ தீர்ப்பு




ஆக்கிரமிப்பு சக்தியாக இஸ்ரேல், அடிப்படைத் தேவைகளை காசாவிற்குள் அனுமதிக்கும் கடமையைக் கொண்டுள்ளது என்ற சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு, சட்டம் "பாலஸ்தீனியர்களின் பக்கம்" இருப்பதையும், "உலகின் தார்மீக மனசாட்சி இன்னும் உயிருடன் உள்ளது" என்பதையும் காட்டுகிறது, என்று கத்தாரில் உள்ள ஹமாத் பின் கலீஃபா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுல்தான் பரகாத் அல் ஜசீராவிடம் தெரிவித்துள்ளார்.

"இந்த சர்வதேச தீர்ப்புகள் அனைத்தையும் அவர்கள் நிராகரிக்கிறார்கள், ஆனால் நீதியின் சக்கரம் அவர்களைப் பிடிக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள், இன்று இல்லையென்றால், நாளை, அல்லது நாளை இல்லையென்றால், 10 ஆண்டுகளில்." என்று அவர் கூறினார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அமெரிக்க டொலரில் இருந்து வெளியேறும் இந்தியா



அமெரிக்க டொலர் போன்ற மூன்றாவது நாணயத்தை நம்பியிருக்காது, நீண்ட காலத்திற்கு தேசிய நாணயத்தை ஆதரிக்கும் முயற்சியில், இந்தியாவின் மத்திய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கி (RBI), அதன் சுதந்திர வர்த்தக கூட்டாளிகள் ரூபாயில் பரிவர்த்தனைகளை எளிதாகச் செய்ய பாடுபடுகிறது என்று இந்திய வட்டாரங்கள் புதன்கிழமை(22) தெரிவித்துள்ளன.

இந்தியா பல நாடுகள் மற்றும் வர்த்தக குழுக்களுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை நிறுவியுள்ளது, இதில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## வெள்ளைக் கொடி விவகாரம்: விசாரணைக்கு கோரிக்கை



சரத் பொன்சேகா வெளிப்படுத்திய வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

2009இல் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன்சரணடைந்தபொது மக்களும், விடுதலைப் புலியினரும் சவேந்திர சில்வாவின் அனுமதியுடனேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் முறையான விசாரணை நடத்தப்பட்டு அதனுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அமெரிக்காவின் கடன் $38 ட்ரில்லியன்த் தாண்டியது



அமெரிக்க அரசாங்க செலவினங்களுக்கும் வருவாய்களுக்கும் இடையிலான இடைவெளிவேகமாக விரிவடைந்து வருவதால், அமெரிக்காவின் தேசியக் கடன் $38 ட்ரில்லியனைத்தாண்டியுள்ளது. அமெரிக்க கருவூலத் துறையின் செவ்வாய்க்கிழமை(21) அறிக்கையில் இந்த அதிர்ச்சியூட்டும் எண்ணிக்கையை ஆக குறிப்பிடப்பட்டுள்ளது

இந்த எண்ணிக்கை அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் சுமார் $111,000 கடனாகும், மேலும் இது சீனா, இந்தியா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதாரங்களின் மொத்த மதிப்புக்கு சமம் என்று வாஷிங்டன், டி.சி.யை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## குற்றவாளிகளுக்கு இராணுவத்தினரே துப்பாக்கிகளை வழங்கியதாக தகவல்



இலங்கையில் திட்டமிட்ட குற்றக்குழு நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தலை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், இந்த ஆண்டில் இதுவரையில் 1947 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றக்குழுவலையமைப்புக்களின் முக்கிய அங்கமாக ஆயுதங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், குற்றக் குழுக்களிடம் இன்னும் ஆயுதங்கள் இருப்பதால், நாடு முழுவதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் கூறினார்.

அத்துடன், முன்னதாக இராணுவ முகாமொன்றிலிருந்து ரீ-56 ரகத்தைச் சேர்ந்த 78 துப்பாக்கிகள் திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரவித்தார்.

அவற்றில்,36துப்பாக்கிகளை அதிகாரிகள் இதுவரை கைப்பற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் திட்டமிட்ட குற்றக்குழு மற்றும் போதைப்பொருள்அச்சுறுத்தலை அரசாங்கம் வேரறுக்கும் எனவும் இந்த நோக்கத்திற்காக, முறையான திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

## புடினுடனான உச்சிமாநாட்டை ட்ரம்ப் புறக்கணித்தார்

ஹங்கேரியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான தனது திட்டமிடப்பட்ட உச்சி மாநாட்டை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரத்து செய்துள்ளார், பேச்சுவார்த்தைகள் இந்த




கட்டத்தில் விரும்பிய முடிவுகளைத் தரும் என்று அவர் நம்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை(22) வெள்ளை மாளிகையில் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டேவுடனான சந்திப்பின் போது ட்ரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டார், ஹங்கேரியில் திட்டமிடப்பட்ட உச்சி மாநாடு "நாம் பெற வேண்டிய இடத்திற்குச் செல்வது போல் உணரவில்லை, எனவே நான் அதை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சாண் ஏற முழம் சறுக்கும் ஐ நா தீர்மானம்!

**பா. அரியநேத்திரன்**

*ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 60, வது கூட்டத் தொடர் கடந்த 2025,செப்டம்பர் 08 தொடக்கம் 2025அக்டோபர் 08 வரை நடைபெற்றதை யாவரும் அறிவர்.*



*ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான இனவழிப்புக் குற்றங்கள் ஆகியவற்றுக்கு நீதியை உறுதிசெய்யப் பன்னாட்டுப் பொறிமுறை வேண்டும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைக்குழிகளை ஆய்வு செய்வதற்கு பன்னாட்டுப் பொறிமுறை வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும் என்று ஈழத்தமிழ் அமைப்புகள், புலம்பெயர் அமைப்புகள்,தமிழ்நாட்டில் இருந்தும் பல அமைப்புகள் எழுத்துமூலமான கோரிக்கைகளை முன்வைத்தன.*

*ஐநா அமர்வுகளிலும் நேரில் சென்று தமிழ் அமைப்பு சார்ந்தவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.*

*கடந்த 2025,அக்டோபர் ,06 ஆம் நாள் இலங்கை பொறுப்புக்கூறல் மற்றும் மீளிணக்கத்திற்கான 60/1 நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானம் இங்கிலாந்து, கனடா, மலாவி, மாண்டிநிக்ரோ, வட மாசிடோனியா ஆகிய ஐந்து நாடுகள் முன்மொழிந்தன. கிட்டதட்ட 30 நாடுகள் இந்த தீர்மானத்திற்கு இசைவு தெரிவிப்பதாக கைச்சாத்திட்டதால் வாக்கெடுப்பின்றி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.*

*இந்த தீர்மானம் முந்தைய தீர்மானங்களான 2015,ல் 30/1 ,2021,ல் 46/1,2022,ல் 51/1, மற்றும் 2024, ல் 57/1 ஆகிய ஆண்டு தீர்மானங்களில் இருந்து தற்போதைய 2025,ல் 60/1, தீர்மானம் ஒரு படி கீழே இறங்கிவிட்டது இது "சாண் ஏற முழம் சறுக்கும் தீர்மானம்" என்றே கொள்ளவேண்டியுள்ளது.*

*"பன்னாட்டு" என்ற சொல் அடியோடு நீக்கப் பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீரமானம் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு பொறிமுறை ஒன்றை முன்வைத்தது. ஆனால், பத்தாண்டுகள் கழித்து அதே பேரவையில் முந்தைய நிலைப்பாட்டை மறுத்து உள்நாட்டுப் பொறிமுறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பயங்கரவாத தடை சட்டம் தமிழர்களுக்கு எதிராகத் தான் 1979, தொடக்கம் 2025, வரை அதிகம் பயன்படுத்தப்படுகின்றது, காணாமலாக்கப்பட்டோருக்கு இன்னும் நீதி உறுதி செய்யப்படவில்லை, செம்மணி புதைக்குழிகளைத் தோண்டியெடுக்கும் ஆய்வுப் பணியில் பன்னாட்டுப் பங்கேற்புதேவை.*

*மென்மேலும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுப்பது என்பது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை செய்வதற்கு அங்கீகாரம் கொடுக்குமே அன்றி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தாது.*

*செம்மணியில் கிருசாந்தி கொலைவழக்கைத் தவிர கடந்த 30 ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளில் தொடர்புடைய ஒருவர் கூட இலங்கை அரசால் தண்டிக்கப்படவில்லை.*

*மேலும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட*

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# ஒற்றையாட்சியால் ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர் இறைமையை ஒருமித்த ஆட்சி மேலும் ஒடுக்காதிருக்க வழிவரைபு தேவை

'வேறுபாடுகள் உடன்பாடின்மைகள் பிரிவினையாக இருக்க வேண்டியதில்லை' என்று 16ம் நூற்றாண்டிற்குப் பின் நீண்ட நானூறு ஆண்டுகள் இடைவெளியைக் கடந்து அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவரான பிரித்தானிய அரசர் மேதகு 3வது சாள்ஸ் அவர்களும் அரசி கமிலா அவர்களும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை 14வது லியோ அவர்களின் வத்திக்கான் நகருக்கு இரண்டு நாட்கள் அரசமுறைப் பயணத்தை மேற்கொண்டு திருத்தந்தை 14வது லியோ அவர்களுடன் கூட்டுத்திருப்பலி வழிபாட்டில் கலந்து கொண்ட வரலாற்று மாற்றம் கடந்த வாரத்தில் இடம்பெற்றுள்ளது. ஈழத்தமிழர்கள் இதனை முன்மாதிரியாகக் கொண்டு வேறுபாடுகள் உடன்பாடின்மைகளை பிரிவினையாக வளர்க்கும் தங்களின் இன்றைய நிலையை மாற்ற வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்ராமர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து வேலை செய்வதற்கான வழியை உருவாக்க உக்ரேன் போரை மையப்படுத்தி அவரவர் தங்கள் தங்கள் தனித்துவத்துடன் "விருப்பமொன்றில் ஒன்றிணைதல்" என்னும் செயலணி முறைமையொன்றை உருவாக்கி கடந்த வாரத்திலும் செலன்ஸ்கிக்கு அமெரிக்க அதிநவீன ஏவுகணைகளை வழங்கவென ஐரோப்பிய ஒன்றியத்தையும் அழுத்தம் கொடுக்க வைப்பதற்கான உச்சி மாநாடொன்றை செலன்ஸ்கியுடன் நம்பர் 10 டவுணிங் ஸ்ரீட்டில் நடாத்தியுள்ளார். இது வேறுபாடுகள் உடன்பாடின்மைகள் இருப்பினும் குறித்த ஒரு இலக்கை அடைய ஒருமைப்பாட்டுடன் வேலைசெய்வதற்கான புதிய முறையியலாக மாறியுள்ளது.

ஈழத்தமிழர்களும் இவ்வாறு ஏன் தங்கள் தங்கள் தனித்துவங்களுடன் ஒரு இலக்கை அடைவதற்கு விருப்பொன்றில் இணைதல் என்ற உத்தியை ஏன் பயன்படுத்தக் கூடாதென்பதே இலக்கின் இவ்வாரக் கேள்வியாக உள்ளது.

இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வரலாற்றுத் தாயகத்தில் வாழ்ந்து வரும் உலகின் சிறுதேச இனமான ஈழத்தமிழினம் தனது பிரிக்கப்பட முடியாத அடிப்படை மனித உரிமையாகிய தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி தங்கள் அரசியல் எதிர்காலத்தை அமைக்கும் தேசநிர்மாணப் பணிக்கு தம்மிடையே ஒருமைப்பாட்டை வேகமாகக் கட்டியெழுப்புவதற்கான வழிவரைபை (Road Map) அமைக்க வேண்டிய தேவையை கடந்த வாரத்தில் இலக்கின் சிந்தனைக்கான பதிவாக ஒரு அன்பர் பதிவிட்டிருந்தார்.

இவருடைய இந்தப்பதிவு அக்டோபர் மாதத்தில் வந்தமை அக்டோபர் மாதமே ஈழத்தமிழர் இறைமை ஒடுக்க மாதமாக வரலாற்றில் விளங்கும் நிலையில் இறைமையை மீளுறுதி செய்வதற்கான வழிவரைபு குறித்து சிந்தனை விழிப்புணர்வை தந்துள்ளதாகவே இலக்கு கருதுகிறது. ஆம்! அக்டோபர் மாதம் உலக வரலாற்றில் ரஸ்யாவின் அக்டோபர் புரட்சியை நினைவேந்தி நிற்பது போல ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அக்டோபர் மாதம் ஈழத்தமிழர் இறைமை ஒடுக்க மாதமாகவே உலக வரலாற்றில் நினைவாகிறது. 1832 அக்டோபர் 31 அன்று தான் ஈழத்தமிழர்களின் 1505 முதல் 1832 வரையான 327 ஆண்டுகால தங்களின் இறைமையைக் காப்பதற்கான போராட்டம் வன்னியில் கற்சிலைமடுவில் பண்டாரவன்னியனின் ஆட்சி பிரித்தானிய காலனித்துவத்தால் கைப்பற்றப்பட்டதுடன் வீழச்சியடைந்தது. 1945 அக்டோபர் 7ம் நாள் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத்தில் சோல்பரி அரசியலமைப்பை தாக்கல் செய்து ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களின் இறைமையுடன் ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் ஈழத்தமிழரின் விருப்புப் பெறப்படாது இணைத்து ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக்கத்தை ஏற்படுத்தினர். அன்று முதல் இன்று வரை 80 ஆண்டுகள் சிங்களப் பாராளுமன்ற கொடுங்கோன்மை ஆட்சியில் இனஅழிப்பை இனத்துடைப்பை பண்பாட்டு இனஅழிப்பையே வாழ்வாக எதிர்கொண்டு அதனை எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

இந்த 2025ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒற்றையாட்சியால் ஏற்படுத்தப்பட்ட ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்தை ஒருமித்த ஆட்சியாக ஈழத்தமிழர்களை ஏற்க வைக்கும் முயற்சிகள் வேகம் பெறுவதை தாயக ஊடகச் செய்திகள் வெளிப்படுத்தியுள்ளன. அநுர அரசின் புதிய அரசியலமைப்புத் திட்ட வரைபுக்குள் ஏக்கிய இராஜ்ஜிய என்ற சிங்களச் சொல்லே சிங்கள இறைமையை மட்டும் உறுதிப்படுத்த கையாளப்படக்கூடும் என்கின்ற கருத்து பரவலாக உள்ளது. இதன் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு ஓரே அரசு என்பதாகத்தான் அமைய முடியும். ஆனால் அதனை 'ஒருமித்த ஆட்சி' என்று மொழிபெயர்த்து மகிந்த கோத்தபாய ரணில் சிந்தனைகளின் தொடர்ச்சியான ஒரு நாடு சிங்கள நாடு - ஒரு சட்டம் பௌத்த சட்டம் என்பதனை உறுதிப்படுத்தும் முறையில் புதிய அரசியல் அமைப்பில் அதனை இடம்பெற வைப்பதற்கு ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் சட்ட அறிவு கொண்டு பலவிளக்கங்கள் அளித்து வருகின்றனர். உண்மையில் ஒற்றையாட்சி என்பது நடைபெறும் ஆட்சி ஒற்றையானது என்பதையே குறிக்கும். ஆனால் ஒருமித்த நாடு என்பது சிங்களநாடு என்பதில் ஒருமித்துப்போதலை அதாவது சிங்கள நாட்டுக்குள் தன்னாட்சி உள்ள தேச இனமாக அல்ல வெறும் குடியேற்ற சமுகமாக அடங்கி போவதைக் குறிக்கும்.

இந்த ஒருமித்த அரசில் ஈழத்தமிழர் மாண்டுவிடாது தடுக்க உலக இனமாகவுள்ள ஈழத்தமிழர் தங்களின் உலகளாவிய ஈழத்தமிழ் இளையோர், ஈழத்தமிழ்த் தகவல் சமுதாயம், மதி வளச் சமுதாயம், நிதிவளச் சமுதாயம், குடிசார் அமைப்புக்கள் என்னும் ஐந்து தளங்களையும் ஈழத்தமிழர்களின் அறியாமையையும் வறுமையையும் நீக்க வல்ல செயல்அணிகளாக ஆளணிகளாக மாற்றுவதே சிறந்த வழிவரைபாகும் என்பது இலக்கின் விளக்கமாகவுள்ளது. இதற்கான சிந்தனைக் கலந்துரையாடல்களே புதிய விடியலைத் தரும். அதற்கு ஒளி ஊட்டக்கூடியது ஒன்றுபட்ட ஊடக எழுச்சியே என்பது இலக்கின் உறுதியான கருத்தாகவுள்ளது.


மேலும் சிறிலங்காவின் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா இசைப்பிரியாவை இனப்படுகொலை செய்தவர் யார் என்பதையும் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களை இனப்படுகொலை செய்தது யார் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறு கிருசாந்தியை இனப்படுகொலை செய்தமைக்காகத் தண்டனை பெற்றவரே சந்திரிகா பண்டாரநாயக்கா மணியம் தோட்டத்துள் புதைத்தவர்களை அடையாளம் காட்ட வேண்டாமென்றதையும் குமார் பொன்னம்பலம் அவர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுவதற்கு முதல்நாள் திகதியிட்டே சந்திரிகா அனுதாபக்கடிதம் அனுப்பியதையும் தான் சாட்சி சொல்ல ஆயத்தம் எனச் சத்தியக் கடுதாசி கொடுத்துள்ளார். இவைகள் எல்லாம் ஈழத்தமிழர்களால் அனைத்துலக மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய தகவல்கள். இதற்கு ஈழத்தமிழர்களிடை ஒருமித்த செயற்பாடு வேகப்படல் அவசியம் என்பது இலக்கின் எண்ணம்.

போர் தொடரும் நிலையிலேயே இனி பொருளாதார முயற்சிகளின் வழியான ஆட்சிமுறைமைகள் தொடரப் போகின்றன. அதுவும் தன்னியக்க செயற்கை நுண்ணறிவு கருவிகள் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படும் போர்முறைகள் பெருவழக்காகும் இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களிடை சிவில் சமுகங்களின் பெருக்கமும் அவற்றை நெறிப்படுத்தக்கூடிய ஆளுமையுள்ள இணைப்புக்களும் இன்றைய தேவையாகின்றன என்பதையும் ஈழத்தமிழர்கள் உணர்ந்து வேறுபாடுகள் உடன்பாடின்மைகளை பிரவினைகளாக்காது பலமான சிவில் சமுக குடையமைப்பொன்றை விரைவாகக் கட்டியெழுப்ப இலக்கு அழைக்கிறது.

**ஆசிரியர்**

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை

## புதிய நிபந்தனைகளுடன் இலங்கைக்கு கிடைக்கும்



**விதுரன்**

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் இன்றியமையாத தூணாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டம், அதன் இரண்டாவது நீடிக்கப்பட்ட சலுகைக் காலம் 2027இல் நிறைவடைவதை ஒட்டி, தற்போது தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது.



2005இல் முதன்முதலாக வழங்கப்பட்டு, பின்னர் 2010இல் நிறுத்தப்பட்டு, 2017இல் மீண்டும் பெறப்பட்ட இந்தச்சலுகை, அடுத்த தசாப்தத்திலும் தொடருமா இல்லையா என்பது இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மைக்கு மிக முக்கியமானதொரு காரணியாகும்.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை, இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு முக்கிய நிதியியல் காப்புக் கவசமாகச் செயற்படுகிறது. இதன்மூலம், மொத்த வரி விதிப்புப் பிரிவுகளில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான (66 வீதத்துக்கும் மேற்பட்ட) இலங்கை உற்பத்திப் பொருட்களை, ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளுக்குச் சுங்க வரி இன்றி (வரியற்ற தீர்வையுடன்) ஏற்றுமதி செய்ய முடியும்.

இலங்கையின் மொத்த வருடாந்த ஏற்றுமதி வருமானம் சராசரியாக 13-14 பில்லியன் டொலர்களாகும். இதில், ஆடைத்துறை மட்டும் 5 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தைக் கொண்டு வருகிறது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் திகழ்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து மட்டும் வருடத்திற்குச் சுமார் 2.5 பில்லியன் டொலர்கள் ஏற்றுமதி வருமானம் கிடைக்கிறது.

ஆடைகள், ரப்பர் பொருட்கள், மீன், மசாலாப் பொருட்கள் மற்றும் விவசாய விளைபொருட்கள் போன்ற முக்கிய துறைகள் தீர்வைகள் இல்லாத ஐரோப்பியச் சந்தை அணுகலை நம்பியுள்ளன. இதன்மூலம், இலங்கையின் உற்பத்திகள் போட்டியாளர்களை விடச் சிறந்த விலையில் ஐரோப்பிய நுகர்வோரை அடைய முடிகிறது.

இந்தச் சலுகையின் பலனை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம்பி, சுமார் 2 மில்லியன் மக்கள் (இதில் 3-4 இலட்சம் பேர் ஆடைத்துறையில் நேரடியாகப் பணியாற்றுகின்றனர்) தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டுள்ளனர். இச்சலுகையை இழப்பது என்பது, இலங்கையின் தொழில்முனைவோருக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

2027-க்குப் பிந்தைய ஜி.எஸ்.பி.பிளஸ் நீடிப்பைப் பெற, இலங்கை அரசாங்கம் மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். இதன் அடிப்படையில், ஐரோப்பிய ஒன்றியம் சுமார் மூன்று ஆண்டுகள் விரிவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இறுதியாக, 2029ஆம் ஆண்டளவில் தான் சலுகை நீடிக்கப்படுமா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.



2027முதல் நடைமுறைக்கு வரவுள்ள புதிய ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி விதிமுறைகள், இலங்கைக்குக் கூடுதல் அழுத்தத்தை அளித்துள்ளன. இலங்கை தற்போதுள்ள 27சர்வதேசச் சாசனங்களுக்கு மேலதிகமாக, புதிய 6 சாசனங்களையும் (மொத்தம் 33 சாசனங்கள்) நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தை எதிர்நோக்குகிறது.

புதிதாக இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் பருவநிலை மாற்றம், பாரிஸ் ஒப்பந்தம், சர்வதேசக் குற்றங்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜி.எஸ்.பி.பிளஸ் இணக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து வலியுறுத்தும் மிக முக்கியமான நிபந்தனை, இலங்கையின் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது அல்லது சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு இணங்க முழுமையாக மாற்றியமைப்பதாகும். ஐரோப்பிய ஒன்றியம் இந்தச் சட்டத்தை ஒரு தீர்மானமான 'சிவப்புக் கோடாக' (Decisive Factor) முன்னிறுத்துகிறது.




இலங்கை அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறது. இருப்பினும், இச்சட்டம் வெறும் பெயரை மாற்றுவதாக இல்லாமல், அதன் உள்ளடக்கம் சுதந்திரம், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்துகிறது.

இச்சலுகை ஒரு வணிக ஒப்பந்தம் மட்டுமல்ல, அது அடிப்படை விழுமியங்களில் இணங்குவதற்கான ஒப்பந்தம்' என்று ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிடுகிறது. இதிலிருந்து அரசாங்கம், குறித்த உடன்பாடுகளில் காண்பிக்க வேண்டிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுக்கள் தொடர்ந்து இலங்கைக்குப் பயணம் செய்து, மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சிவில் சமூகத்தின் பங்கு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட 27 சாசனங்களின் 'நடைமுறைப்படுத்தலை' மதிப்பீடு செய்கின்றன. சலுகையைப் பெறுவதற்கான முழுப் பொறுப்பும் நிபந்தனைகளை திறம்பட நிறைவேற்றுவதில் இலங்கை அரசுக்கு உள்ளது என்பதை ஐரோப்பிய ஒன்றியம் தெளிவாக வலியுறுத்துகிறது. அவர்கள் ஒரே இரவில் மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை என்றாலும், இலங்கை அரசாங்கம் அந்த 33 நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியான, வெளிப்படையான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே அதன் எதிர்பார்ப்பாக உள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈழப்போர் காலத்தில் மறக்கமுடியாத அக்டோபர் மாதம்..!


1987அக்டோபர்


1990அக்டோபர்


1995அக்டோபர்

பா. அரியநேத்திரன்

ஈழவிடுதலைப்போராட்ட காலத்தில் அக்டோபர் மாதம் யாழில் வெவ்வேறு ஆண்டுகளில் மூன்று சம்பவங்கள் என்றுமே மறக்கமுடியாத வரலாற்றில் இடம்பெற்றுள்ளன.

**1. 1987 அக்டோபர் 21ல், யாழ்போதனாவைத்தியசாலை நோயாளர்கள்மீது இந்திய கொலைப்படை நடத்திய படுகொலைத் தாக்குதலில் 70 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்.**
**2. 1990 அக்டோபர் 30ல் விடுதலைப் புலிகளால் யாழ் முஸ்லீம்மக்களை வெளியேறுமாறு கூறியதால் வெளியேற்றப்பட்ட சம்பவம்.**
**3. 1995 அக்டோபர் 30ல் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஏற்பட்ட ஆயுத மோதலால் ஐந்து இலட்சம் மக்கள் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறிய மறக்கமுடியாத சம்பவம்.**

இந்த மூன்று சம்பவங்களும் அக்டோபர் மாதத்தில் இடம்பெற்றவை

யாழ்ப்பாண நகரம் 1980, தொடக்கம் 1995 வரை 15, ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் முதன்மையான கோட்டையாக இருந்து வந்தது. ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன ஆட்சிக்காலத்தில் 1987 யூலை29, இலங்கை ஒப்பந்தம், 1987ஆகஷ்ட் 04ல் தலைவர் பிரபாகரனின் சுதுமலை பிரகடனம் எல்லாம் இடம்பெற்றது. 1987 அக்டோபர் 10ல் இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் போர் ஆரம்பித்த பின்னர் சரியாக 11, தினங்களால் 1987 அக்டோபர் 21ல் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் மேற்கொண்ட மிலேச்சத்தன மான படுகொலையால் 70 தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டு 2025-10-21ம் திகதியுடன் 38 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.



1990, செப்டம்பரில் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணம் அம் பாறை மாவட்டம் திருக்கோயில் தொடங்கி மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளிவரையும் முஸ்லீம் ஊர்காவல்படையினர் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பல தமிழ் கிராமங்களில் இனப்படுகொலைகளை மேற்கொண்டனர் அதனால் முஸ்லீம் கிராமங்களான காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளிலும் முஸ்லீம்மக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான சம்பவம் யாழ்ப்பாணம் முஸ்லீம்மக்களுக்கு ஏற்படக்கூடாது என்ற ஒரே காரணத்தால் விடுதலைப்புலிகள் 1990, அக்டோபர், 30ல் யாழ்ப்பாண முஸ்லீம்மக்கள் பாதுகாப்பாக ஒரே நாளில் வெளியேறிய சம்பவம் வருகின்ற 2025-10-30 ம் திகதியுடன் 35ஆவது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.



1995 ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக்காலத்தில் அக்டோபர் 17 இல், இலங்கை இராணுவத்தி னர் 10,000 பேர் யாழ்ப்பாண நகரத்திற்கு 25 மைல் தொலைவில் போரை தொடரத் துவங்கினர். அது தொடர்ந்ததமையால் யாழ் குடா நாட்டில் இருந்து ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் 1995, அக்டோபர் 30ல் இடம்பெயர்ந்தனர். அது இடம்பெற்று 2025, அக்டோபர் 30ல் 30ம் ஆண்டு நினைவாகும். இந்தத் தாக்குதல் 1995, திசம்பர் 05, வரை நீடித்தது. இந்த 50 நாள் போரில் 300 வரையிலான இலங்கை இராணுவ வீரர்களும், 550இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டதாக அப்போது கூறப்பட்டது. இறுதியில் இராணுவம் புலிகளிடமிருந்து நகரத்தையும் குடாநாட்டையும் கைப்பற்றியது. இதனால் விடுதலைப்புலிகள் வன்னியில் சென்று தமது படைத்தளத்தை முழுமையாக பலப்படுத்தினர்.

1995 அக்டோபரில் யுத்த முனையில் இராணுவத்தினரின் கைகள் ஓங்கியிருப்பது பலருக்கும் தெரிந்திருந்தாலும் விடுதலைப்புலிகளின் இராணுவ நகர்வுகள் பற்றி யாருக்கும் எதிர்வு கூற முடியாத நிலையில் எந்த ஒரு யாழ்ப்பாண குடிமகனும் தானும் உறவும் ஒட்டுமொத்தமாய் இந்த நிலத்தை விட்டுப் பிரிவோம் என்று அப்போது நினைத்திருக்க வில்லை.

இலங்கைப் படையினரின் 'ஒப்பரேசன் ரிவிரச' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெற்றது. இச்சண்டையைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக, வலிகாமம் பகுதி முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தின் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பகுதி முழுவதும் படையினரால் கைப்பற்றப்பட்டு, மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கோடு 1995 அக்டோபர் 17ம் திகதி இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் ரிவிரச, சூரியக்கதிர் என்னும் இராணுவ நடவடிக்கையை அடுத்து இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலையடுத்தே இந்த இடப்பெயர்வு இடம்பெற்றது.




அந்த இராணுவ நடவடிக்கை கந்தசஷ்டி விரத காலம் ஆலயங்களில் எல்லாம் விசேட பூசை வழிபாடுகள் நடந்த வேளையில் பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி வருவதும், அன்றைக்கு சில நாட்கள் முன்பாக அந்த நடவடிக்கையை முறியடிக்க புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியைத் தராமல் போனதும் அப்போது பேசும் பொருளாக வடக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மகாநாசத்துக்கும் மகாவம்சமே காரணம் என்கிறோம் ஏன்?





உயிரோடைத் தமிழ் வானொலிக்கு என்.சரவணன் அவர்கள் அளித்த செவ்வி யின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின் றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan)

**மகா நாசத்திற்கும் மகாவம்சம் தான் காரணம். அது ஏன்?**

மகாவம்சம் என்பது மிகவும் எளிதாக படித்து விளங்கக்கூடிய நூல் அல்ல, அது எங்களுக்கு தெரியும். மகாவம்சம்வெறும் புத்தகம் மட்டும் அல்ல; அது சிங்கள சமூகத்தில், சமூகத் தொடர்பில், ஒரு பௌத்த புனித நூலாகமதிக்கப்படுகிறது. இதன் பதிப்பு இலங்கைக்கு மட்டுமல்ல; அது பல நாடுகளில் மொழிபெயர்க்கப்பட்டு வந்துள்ளது. தமிழில் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு செய்யப் படவில்லை. இருந்தாலும் அதுவும் சரியான வடி வில் கிடைக்கவில்லை.

உலகின் பல நாடுகள்—கம்போடியா, இந்தியா, தாய்லாந்து போன்றவை—மகாவம்சத்தை பௌத்த புனித நூலாக கருதிமொழிபெயர்த்து வருகின்றன. இலங்கையின் நிலைப்பாட்டில், 2600 ஆண்டுகளாக தொடர்ச்சியாக எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவாக இதை பார்க்கலாம்.

இன்றைய அரசாங்கம் 1956 ஆம் ஆண்டில் முதல் மூன்று தொகுதிகளையும் பூர்த்தி செய்ய ஆரம்பித்தது. அதாவது, முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதிகள் தனிநபர்கள், பௌத்த துறவிகள் எழுதியவையாகஇருந்தாலும், 1956 முதல் கடைசி தொகுதிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் வந்துள்ளன. இதன் முக்கியத்துவம் இதிலேயே வெளிப்படுகிறது.

முதலாவது தொகுதி, மானாம தேரனுடைய தொகுதி, இது மிகவும் சர்ச்சைக்குரியதாகும். ஏனெனில், ஐந்தாம்நூற்றாண்டில் மகாவம்சம் எழுதும் போது, ஆசிரியருக்கு கிடைத்த மூலங்களும், வாய்மொழியாக கடத்தப்பட்டகதைகளும், பிக்குமார்க ளின் மரபுப் பதிவுகளும், கலாச்சார சான்றுகளும் அடிப்படையாக பயன்படுத்தப்பட் டன. இவைஅனைத்தும் சேர்க்கப்பட்டு உருவாக் கப்பட்ட நூல்தான் மகாவம்சம்.

மூல நூல்களில் ஒன்று ''சிகல அட்டகத்தா'' என குறிப்பிடப்படுகிறது, ஆனால் அது கண்டு பிடிக்கப்படவில்லை. பல இலக்கியங்களிலும் சிகல அட்டகத்தாவைப் பற்றி குறிப்புகள் உள்ளன. இதன் அடிப்படையில் மகாவம்சம்உருவானதாக நம்பப்படுகிறது. எனவே, இதன் உள்ளடக்கம் சில கற்பனையான கதைகளையும், மறுபடியும் தொல்லியல்ரீதியிலும் பூர்வீகச் சான்றுகளையும் கொண்டதாகவே பார்க்கப்படுகிறது.

முதலாவது தொகுதியில் உள்ள பல விவ ரங்கள் இன்றைய தொல்லியல் ஆய்வுகளால் சான்றளிக்கப்படவில்லை. இதைசிங்கள ஆய்வா ளர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

எனவே ''சிங்கத்துக்கு பிறந்தவர்கள்'' என்ற கதை கூட, இன்று ஆய்வாளர்கள் அல்லது சிங்கள சமூகத்திற்குமிகப்பெரிய அவமானமாகத் தெரிகிறது. அதே நேரத்தில், இதை முழுமையாக ஒட்டுமொத்த புனைவாகக் கொள்ளும்அபாயமும் உள்ளது.

ஆனால், பலர் இதை மறுக்கின்றனர். இது ஒரு புனைவாக மட்டுமே வந்ததாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால், அந்தபுனைவை விட்டு நம்மால் பார்க்க வேண்டியது முக்கியம் என்று சொல்வோரும் உள்ளனர்.

இன்றைக்கு, இதை ஏற்றுக்கொள்வோர் குறைவாக இருக்கின்றனர். ஆனால், சில சமயங்களில், சாமானியர்கள் இதைஏற்றுக்கொள் ளச் செய்கின்றனர், நீங்கள் சொன்ன கதைகளின் அடிப்படையில். முக்கியமாக, இந்த மகாவம் சத்தை புறக்கணிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இதை இலகுவாகப் புறக்கணிக்க முடியாது.

ஏனென்றால், மகாவம்சத்தில் இலங்கையு டன் தொடர்புடைய பிற்காலத் தகவல் களை கண்டறிய உதவும் பல சரித்திர உண்மைகள் நிறைந்துள்ளன. பல மன்னர்கள், அவர்களால் கட்டப்பட்ட கோட்டைகள், விகா ரைகள், செய்த பணிகள் இதில் உறுதிப் படுத்தப் படுகின்றன.

மேலும், பிற்கால தொல்லியல் கண்டுபிடிப் புகளுடன் பொருந்தும் தகவல்களும் இதில் உள்ளன. அதே நேரத்தில், பலபுனைவு கதைகளும் சேர்ந்து உள்ளன.

கைகர் மொழிபெயர்ப்பாளர் இதைப் பற்றி சொல்லும்போது, மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், ''இதில் எதுஉண்மை, எது பொய்'' என்பதை அடையாளம் காண்வது மிகவும் கடினம் என்று கூறுகிறார். இதுவே கைகரின் மகாவம்சமொழிபெயர்ப்பில் குறிப்பிடப்பட்ட முக்கியம். இதே உலகம் முழுவதும் ஏற்றுக்கொள் கிற ஒரு கருத்து ஆகும்.

இப்போது, ''புத்தர் மூன்று முறை இலங்கை வந்தார்'' என்று கூறப்படுகிறது. அந்த மூன்று வருகைகளையும் பற்றிய பலஇலக்கியங்கள், பௌத்த இலக்கியங்கள், கதைகள் மற்றும் பெரிய புராணங்கள் உள்ளன.

அதே நேரத்தில், வேறு ஆய்வுகள் சொல்வ தென்றால், ''புத்தர் ஒருமுறை கூட இலங்கை வந்திருக்கவில்லை'' என்கின்றன. உண்மையில், தொல்லியல் ஆய்வுகளில் இதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

பேராசிரியர் பரணவிதானின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. அவர் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற சிங்களதொல்லியல் அறிஞர். அவர் புத்தர்மூன்று முறைஇலங்கைவந்ததாகஆதாரங்கள் இல்லை. எனக்கூறுகின்றார். இந்தகருத்துக்காக பல இடங்களில் அவர் நிராகரிக்கப்படுகின்றார், ஆனால் அவர் உறுதியுடன் கூறியுள்ளார்.

இன்றைக்கும் பலரும் இதே கருத்தை பகிர்கின்றனர். இது போன்ற பல சிக்கல்கள் உள்ளது, அதில் ''சிங்கத்துக்குபிறந்தவர்கள்'' என்ற புனைவுகளும் அடங்கும்.

அதே நேரத்தில், எங்களை பாதிக்கிற முக்கியமான சிக்கல் என்னவென்றால், அது ''தம்மதீப கருத்தாக்கம்'' ஆகும்.

தம்மதீப கருத்தாக்கம் என்னவென்றால், புத்தர் பிறந்த நாள், புத்தர் இறந்த நாள் (பரிநிர்வாணம் அடைந்த நாள்), மற்றும் விஜயன் 700 தோழர்களுடன் இலங்கைக்கு வந்த நாள்—அனைத்தும் ஒன்று.

அந்த விசாக பௌர்ணமி நாள், மிக முக்கியமான நாள். இன்று இலங்கையில் விசாக் தினம் கொண்டாடப்படுவது, புத்தரின் இறப்பு நாளோடு மட்டுமல்ல, அதே நாளில் அவரின் பிறந்த நாளும் சேர்ந்து கொண்டாடப்படுவ தால்முக்கியத்துவம் பெற்றது. அவருடைய பிறந்த நாள், இறந்த நாள், மற்றும் இடம் இவை இணைந்து, இலங்கையில்சிங்கள இனம் தோன்றி யதை குறிக்கின்றன.

விஜயன் இலங்கைக்கு வந்ததாக சொல் லப்படுகின்றது. ஆய்வுகளின் ரீதியாக, சிலர் விஜயன் வரவில்லை என்றும்கூறுகின்றனர். இதற் கான தொல்லியல் ஆதாரங்களும் இல்லை.

பொதுவாக, ஒருவர் ''ஏதாவது தொல்லியல் சான்றுகளைக்கேட்டால் அதற்கு மேலாக எந்த விதமான விவாதமும் இல்லாமல் போகும். அதே போல, புத்தரின் உயிர் போய்க் கொண்டிருந்த நாளில், விஷ்ணு பகவானுக்கூடாக ஒரு செய்தி அனுப்பியதாகவும் கூறப்படுகிறது. அந்த செய்தி என்னவென்றால், ''இலங்கை தீவில் தான் அடுத்த வருகின்ற 5000 ஆண்டுகளுக்கு தனது பௌதம் பேணப்படப்போகின்றது, அதைக் காப்பாற்று கின்ற பொறுப்பை மக்களுக்குவழங்குகிறது'' என சொல்லப்படுகிறது.

இந்த பொறுப்பு யாருக்கு? விஜயன் உள்ளிட்ட சிங்கள மக்களுக்கு. எனவே இதன் அடிப்படையில் தான், இந்தகருத்தைக். கொண்டு, ஒட்டுமொத்த இலங்கையையும் நாசப்படுத்தும் சூழல் உருவாக்கப்பட்டது.

மதத்தின் பெயரில் எந்த கருத்தையும் புனிதப்படுத்தி, மக்கள் அதில் ஈடுபாடு காட்டும் திறன் உலகம் முழுவதும் எல்லாமதங்களுக்கும் காணப்படுகிறது.

எனவே, இது இலகுவாக, பௌத்தத்தின் பெயரால், அதாவது புத்தரின் பெய ரால், ''அவர் சொன்னார், அடுத்த 5000 ஆண்டுகளுக்கு பௌத்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மாகாணசபைத் தேர்தல் இழுத்தடிப்பு செய்யப்படுவது ஆரோக்கியமானதல்ல

இலங்கையின் தேர்தல் முறைகளில் மாகாண சபை தேர்தல் என்பது முக்கியமானதொன்றாகும். ஒன்பது மாகாணங்களிலும் தற்போது ஆளும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுனர்களின் தலைமையில் நிருவாக கட்டமைப்பு உள்ளிட்ட அத்தனை அதிகாரங்களும் காணப்படுகின்றது.

மாகாண சபை தேர்தல் ஆட்சிக்கு மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களால் இழுத்தடிப்பு செய்யப்படுகின்ற நிலை காணப்படுகிறது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வந்ததன் பிற்பாடு மாகாண சபை தேர்தலை நடாத்துவதா பழைய முறையில் நடாத்துவதா என்ற தடுமாற்றங்கள் காரணமாக இழுத்தடிப்பு செய்யப்படுகிறதா அல்லது அநுர அரசாங்கம் வடகிழக்கில் தோல்வியை சந்தித்து வாக்குகளில் தமிழ் முஸ்லீம் மக்களின் செல்வாக்கு இழக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் காணப்படுகிறதா என்ற சந்தேகம் நிலவுகிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகளில் உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

தமிழ் மக்களை திருப்திப்படுத்த இந்திய தலையீட்டுடன் மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டாலும் அதன் பலன்களை முஸ்லீம், மலையக சமூகம் ஏன் பெரும்பான்மை சமூகமும் பெற்றுக் கொண்டுள்ளார்கள். தேர்தலை நடாத்தாது இழுத்தடிப்பு செய்வது அரசியல் ரீதியானதும் சட்டச் சிக்கல்களை கொண்ட தடங்களே காரணத்தை வைத்து பொடுபோக்காக காலத்தை கடத்துகின்றனர்.



இவ்வாறான நிலையில் இது குறித்து அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான அ.நிக்ஸன் தெரிவிக்கையில் " 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக மாகாண சபை தேர்தல் நடாத்தப்பட வேண்டும். இறுதியாக சுமாராக 2026 உம் பிறக்கவுள்ள நிலையில் ஏழு வருடங்களாகின்றது. ஆனால் தேர்தல் நடாத்தப்படவில்லை. இந்த மாகாண சபை தேர்தல் முறை சகல மக்களுக்கும் அதிகார பகிர்வை வழங்கக்கூடியதாகவுள்ள நிலையில் குறிப்பாக வடகிழக்கு தமிழ் மக்களுக்கு முக்கியமானதாகும். 13ம் திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டாலும் தேர்தல் என்பது கட்டாயமானது. வடகிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை கருத்திற் கொண்டு மாகாண சபை தேர்தல் ஜனநாயக வழியில் பிரச்சினைகளை தீர்க்கும். குறிப்பாக வடகிழக்கு மக்களின் ஒரு ஆரம்ப புள்ளியாக இத்தேர்தல் நடாத்தப்படுவது முக்கியமானதாகும்.

ஜேவிபி உள்ளிட்ட சிங்கள பிரதான அரசியல் கட்சிகள் அல்லது சிங்கள பகுதி மாகாண சபைகளில் அங்கம் வகித்த முன்னாள் முதலமைச்சர்கள், உறுப்பினர்கள் எவரும் தேர்தலை நடத்த வேண்டும் என இதுவரை வாய்திறக்கவில்லை.

1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையும் அதற்காக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டமும் தமிழர்களுக்கானது.

2017 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி, 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை எதிர்க்கட்சியாக இருந்த ஜேவிபி கோரவேயில்லை.

"இலங்கை ஒற்றையாட்சி அரசு" என்ற கட்டமைப்பு 2009 இற்குப் பின்னர், தனது பௌத்த தேசிய கொள்கையை நன்றாக நீட்டி நிமிர்த்தி நிம்மதியாக - அமைதியாக - இலகுவாக, நகர்த்திச் செல்கிறது என்பதை மாத்திரம் வேண்டுமென்றே புரிந்துகொள்ள மறுப்பார்கள்...!

அதனைஅவ்வப்போது நியாயப்படுத்தியும் விடுவர். எது எப்படியாக இருந்தால் மாகாண சபை முறை என்பது தமிழ் மக்களுக்கானது அரசியல் அபிலாசைகளுக்கானது என்றார்.

தேர்தலை நடாத்தி சபைகளை சுயமாக இயங்க வைக்க விடுவதனால் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கைகளும் காணப்படலாம். எவ்வாறாயினும் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவில்லை என்பதே களநிலவரம் சொல்கிறது. இதனால் தேர்தலை விரைவாக ஆளும் அரசாங்கம் நடாத்தி அதிகார பரவலாக்கத்தை செய்தால் வடகிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் விழிப்படைய வேண்டி வரும்.

ஆனாலும் அநுர அரசாங்கம் தேர்தலை நடாத்திக் காட்டாமல் ஏன் தயங்குகிறது. மக்கள் மனதில் மாற்றம் திடீரென ஏற்பட்டு வாக்குச் சரிவு ஏற்படுமோ என்ற அச்சநிலையில் உள்ளார்கள் என்பதுதான் பெரும்பாலான அரசியல் தரப்புக்களின் கணிப்பாக காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தேர்தல் தொடர்பில் பல திட்டங்களை மேற்கொண்டு வரும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (CAFFE) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவிக்கையில் "மாகாண சபை தேர்தலை நடாத்த முடியாமைக்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சட்டச் சிக்கல் நிலவுகிறது. சில மாகாணங்களில் 2012ல் இறுதியாகவும், 2014லும் தேர்தல் நடந்துள்ளது. இதன் பிரகாரம் 2017 ம் ஆண்டு மற்றும் 2019 ம் ஆண்டு வரைக்கும் சரியான கால எல்லைக்குள் மாகாண சபை ஆட்சியை வடக்கு ,தெற்கு மாகாணங்கள் முடிவுறுத்தியமையை புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகிறது.




2017 தொடக்கம் 2020க்கு இடையில் "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சி செய்த போது இதனை பொருட்படுத்தவில்லை 2020ல் அரசாங்கம் மாறியதால் பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டதால் கலப்பு முறை தேர்தல் தேவை என்பதால் மீள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவை உருவாக்கி பிரதமர் தலைமையில் குறித்த அறிக்கை இரு மாதங்களில் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என கூறிய போதும் அது சாத்தியமாக்கப்படவில்லை என்பதாலும் பாராளுமன்றத்திலும் சட்டம்நிறைவேற்றப் படவில்லை. இதனால் புதிய முறையிலா? அல்லது பழைய முறையிலா? என்ற நிலையில் தேர்தலை நடாத்த முடியாது தற்போது வரைக்கும் தத்தளிக்கின்றனர். இதனால் தற்போதைய அரசாங்கமும் சரியான முடிவு எடுக்க தவறியுள்ளனர் . இதனால் சாட்டுப் போக்குகளை சொல்லி அரசாங்கம் நழுவ முடியாது. பெரும் பான்மை ஆசனங்களை கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும் பான்மையுடன் சட்டத்தை நிறைவேற்றி கொள்ள முடியும். அதாவது எல்லை நிர்ணயத்தில் பிரச்சினைகள் காணப்படுவதாக இருந்தால் விகிதாசர முறையில் பாராளுமன்றத்தில் பெரும் பான்மை ஊடாக கொண்டு வர முடியும். எல்லை நிர்ணயத்துக்கு மீண்டும் சென்று காலம் கடத்தாது பாராளுமன்றத்தில் பழைய முறையில் சட்டமாக கொண்டு வந்து தேர்தலை நடாத்தி மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்து அதன் பிற்பாடு உரிய காலப் பகுதிக்குள் அடுத்த எல்லை நிர்ணயம்,மாகாண சபை முறை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதே எனது அபிப்பிராயமாகும்.




வடகிழக்கில் மாகாண சபை தேர்தலை பொறுத்தமட்டில் கடந்த காலங்களில் முதலமைச்சர்களாக தமிழ்,முஸ்லீம் தரப்புக்களை சேர்ந்த கட்சிகளே ஆட்சி செய்துள்ளனர். இதே போன்று அநுர அரசாங்கத்துக்கு இம் முறை அதிக வாக்குகளை முஸ்லீம் தமிழ் மக்கள் வழங்கியுள்ளனர். ஆனாலும் நேரடியாக வடகிழக்கில் ஒரு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட தெரிவு செய்யப்படவில்லை. தேசிய பட்டியலில் கிழக்கில் ஒருவருக்கு ஆசனம் வழங்கப்பட்டது.

பல தடைகள் ,சிக்கல்கள் இருந்தாலும் மாகாண சபை முறையை அரசாங்கம் நடாத்தியே ஆகவேண்டும். அப்போதுதான் ஜனநாயக நாட்டின் பண்பாக மாற்றமடையும் . இப்போதிருந்தே தேர்தலுக்கான ஆயத்தங்களை செய்வதனால் எதிர்வரும் ஜனவரியில் தேர்தல் நடத்தப்படலாம் என்கின்ற நிலையும் அரசியல்வாதிகளின் மன நிலையில் தங்கியுள்ளது. இதனால் வடகிழக்கு தமிழ் கட்சிகள் தேர்தலை வெற்றி கொள்ள பல பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருவதை எம்மால் காணக்கூடியதாகவுள்ளது.

கின்னியான்

• • •

# யாழ் மருத்துவமனைப் படுகொலை





## குருதியால் நனைந்து போனது உலகின் உயர்ந்த புனிதப் பணி நடக்குமிடம்

**அத் துயரத்தின் நினைவு நாள் இன்று**
***(1987.10.21 2025.10.21)***

யாழ் மருத்துவமனைப் படுகொலை எனும் பெரும் சோகம் நிறைந்த குருதியால் நனைந்த புனிதப் பணியிடத்தின் நினைவில் நீங்காத கரிநாள் பற்றி...

இன்றைய நாள் ஈழத் தமிழர்களின் வரலாற்றுத் தடத்தில் மறக்க முடியாத வலி நிறைந்த பல கோர நினைவுகளைச் சுமந்த மிக இருண்ட நாட்களில் ஒன்றான சோக தினம். மருத்துவமனை என்பது நோயாளாகளுக்கும், காயமடைந்தோருக்கும் மறுவாழ்வு தரும் புனிதமான இடம். போர்க்களமாயினும் கூட அங்கும் மருத்துவம் நடைபெறும் இடம் புனிதமானதுஎன்பது சர்வதேச விதி.

ஆனாலும், 1987 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில், அந்தப் புனிதமான இடமே ஒரு கொலைக்களமாக மாற்றப்பட்டு இரத்த வெள்ளத்தில் நனைந்துபோனது.

உயிர் காக்கும் உயர்ந்த பணியில் தெய்வத்திற்கு நிகராகப் பார்க்கப்படும் மருத்துவர்களும், தாதியர்களும், பணியாளர்களும், உயிர் காக்க அங்கு தஞ்சமடைந்திருந்த நோயாளிகளும், பொது மக்களும் அமைதிப்படை ஏனக் கூறிப் பாரத தேசம் அனுப்பிய இந்திய அமைதிப்படையினரின் ஈவு இரக்கமின்றிய படுகொலை வெறியாட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அன்றைய வைத்தியசாலையைத் திடீரென சுற்றிவழைத்த இந்திய இராணுவம் வைத்தியசாலையை நோக்கிச் சுட்டு எம் மக்கள் பலர் கொல்லப்பட்ட அந்தத் துயரத்தின் வடு இன்றும் ஆறாமல் உயிர்ப்புடன் இருக்கிறது.



1987ஆம் ஆண்டு, ‘ஒப்பரேசன் பவன்’ என்ற பெயரில் பாரதத் தாயின் பிள்ளைகள் ஆயுதம் தாங்கி இந்திய அமைதிப்படை எனும் பெயரில் விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. யாழ் குடாநாடு முழுவதும் இவர்களது எறிகணை வீச்சுகளாலும், துப்பாக்கிச் சூடுகளாலும் அதிர்ந்து கொண்டிருந்தது.

இவர்களின்கண்மூடித்தனமானதாக்குதல்களில் அச்சமடைந்த எமது மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடிக்கொண்டிருந்தனர்.

**தாமோதரம் பிரதீவன்,**
மனித உரிமை செயற்பாட்டாளர்,
ஆய்வாளர்,எழுத்தாளர்.



அவ்வாறான நெருக்கடியும், அச்சமும் நிறைந்த காலத்தில், யாழ் போதனா வைத்தியசாலைதான் குண்டுவீச்சுகளில் காயமடைந்தவர்களுக்கும், நோயாளிகளுக்கும், அடைக்கலமும், மறுவாழ்வும்,பாதுகாப்பும் கொடுத்துக் கொண்டிருந்தது. இவ்வாறு பாதுகாப்புத் தேடிய பல நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கும் ஒரே அடைக்கலமாக விளங்கியது இந்த வைத்யசாலை தான்.

இங்கு பணி புரிந்த மருத்துவர்களும், தாதியர்களும் தமது உயிரைக்கூட பணயம் வைத்து, ஊன், உறக்கமின்றியும்,ஓய்வின்றியும் அங்குச் சேவையாற்றிக் கொண்டிருந்த காலமது.

அப்படியொரு நாளில் அந்தக் கொடிய நாளான 1987.அக்டோபர் 21 ஆம் திகதி காலை, வைத்தியசாலைக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக இந்திய அமைதிப்படைக்கு பக்கவாத்தியம் இசைத்த தமிழினத் துரோகிகள் மூலமாக தவறான போக அந்தத் தவறான தகவலின் அடிப்படையில், இந்திய அமைதிப்படையினர் மருத்துவமனை வளாகத்தைச் சுற்றி வளைத்தனர்.

இந்நிலையில் சுற்றிவளைத்த பாரதத் தாயின் படைகள் எந்தவித முன்னறிவிப்புமின்றி மருத்துவமனைக் கட்டடங்களை நோக்கித் துப்பாக்கிச் சன்னங்களை மழையெனப் பொழிந் தனர். இத் தாக்குதலில் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, கதிரியக்கவியல் பிரிவு மற்றும் பல பிரிவுகளும், பல கட்டடங்களும் தாக்குதலுக்கு உள்ளாயின.

வைத்தியசாலையின் உள்ளே, உயிரைக் காக்கப் போராடிக்கொண்டிருந்த மருத்துவ ஊழியர்களும், நோயாளிகளும் செய்வதறியாது திகைத்து நின்றிருந்தனர். நோயாளர் கட்டில்களுக்குக் கீழும், மேசைகளுக்குப் கீழும், நிலத்திலும்,படுத்துப் பதுங்கிக்கொண்டு உயிர்தப்ப முயன்றனர். ஆனாலும் அமைதிக்காக வந்த அடைக்கலம் தரவேண்டிய பாரதத்தாயின் படையினர் மருத்துவமனைக்குள் நுழைந்து, கண்ணில் கண்டவர்களையெல்லாம் ஈவு இரக்கமின்றி சுட்டுத் தள்ளினர்.




இந்நிலையில் தனது பணியை முடித்து விட்டு வீடு திரும்பிய மருத்துவர் ஏ. சிவபாத சுந்தரம் ஐயா மருத்துவமனையிலிருந்த வந்த அவசர அழைப்பை ஏற்று அவசரமாக மீண்டும் மருத்துவமனை நோக்கி வருகின்ற போது வழியிலேயே வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சோகமும் நிகழ்ந்தது.

அதேபோன்று அங்கு உயிர் காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மருத்துவர்களான திரு.கே. பரிமேலழகர், திரு. கணேசரத்தினம், ஆகியோருடன் மூன்று தாதியர்கள் உள்ளிட்ட பல மருத்துவ ஊழியர்களும் தமது

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# மீரியபெத்த மனித படுகொலைக்கு 11 வருடங்கள்

மருதன் ராம்

மலையகத்தில் மிகப்பெரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்திய மீரியபெத்த பேரவலம் அரங்கேறி எதிர்வரும் 29ஆம் திகதியுடன் 11 வருடங்களாகின்றன. மண்ணுக்குள் புதையுண்டு 37 பேர் உயிரிழந்தனர். பலரின் சடலங்கள் மீட்கப் படவில்லை. மலையக மக்களின் உரிமைக்காக தொடரும் போராட்டத்துக்கு மத்தியில் அவர்கள் செத்து மண்ணுக்கு உரமானார்கள்.



இலங்கையின் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள மீரியபெத்த தோட்டத்தில் 2014 இல் ஏற்பட்ட மண்சரிவானது மக்களிடையே உயிரிழப்புக்கள், உடல், உளப் பாதிப்புக்கள், சொத்தழிவு, சமூகக்கட்டமைப்பு மற்றும் சமூக நிறுவனங்களில் மாற்றங்கள், சூழலியல் மாற் றங்கள் என பல்வேறு பாதிப்புக்களை ஏற் படுத்தியது. மலையகத்தில் மண்சரிவு அனர்த் தங்கள் வழமையாக அமைந்தாலும் மீரியபெத்த தோட்ட மண்சரிவு வரலாற்றில் பதியுமளவு முக்கியம் பெற்ற இயற்கை அனர்த்தமாகக் காணப்படுகின்றது.



ஏனெனில் பல மக்களின் உயிரிழப்பு களுக்கு இவ்வனர்த்தமே காரணமாக அமைந்தது. அனர்த்தத்திற்கு பின் மீள் கட்டுமான, மீள் நிர்மாணப் பணிகள் அரசாங்கத்தினாலும், தனியார் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக இயற்கை அனர்த் தங்கள் உலகளாவிய ரீதியாக அதிகரித்து வரு கின்றன. இந்தவகையிலே கடந்த 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதி பதுளை மாவட்டத்தின் அல்தமுல்லை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கொஸ்லாந்தை-மீரியபெத்த தோட்டத்தில் காலை 7.40 அளவில் பாரிய மண்சரிவு ஏற் பட்டது. மீரியபெத்த தோட்டத்தின் ஒரு பகுதி யில் ஏற்பட்ட மண்சரிவால் 37 பேர் மண்ணில் புதையுண்டு பலியான அதேவேளை 88 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் நேரடியாக வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து அகதி களாகினர்.

**மீரியபெத்த மண்சரிவு ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்.**

மீரியபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் மீரியபெத்த தோட்டத்தின் முழு சமூக கட்டமைப்பையும் பாதித்துள்ளது. மக்களது தேவைகளை நிறைவு செய்யும் சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகளின் உள்ளார்ந்த, மற்றும் வெளிப்படையான செயற்பாடுகள் அத்தனையும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக மண்சரிவால் உயிர்களையும், முற்று முழுதான சொத்துக்களையும், காலம் காலமாக தங்களுக்கான தனித்துவமாக பேணி பாதுகாத்து வந்த பண்பாட்டு அம்சங்கள் போன்றன மண்ணுக்குள் புதையுண்டமை சமூக கூறுகளில் உடைவை ஏற்படுத்தியுள்ளன. இத்தோட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஒரு கிலோமீட்டர் சதுரஅடி பரப்பினையுடைய நிலம் முற்று முழுதாக மண்ணுக்குள் புதைந்துள்ளதோடு மண்சரிவு அனர்த்தத்திற்கு முன் இதே இடத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான எந்தவொரு அடை யாளமும் இன்று இல்லாமல் போயுள்ளது. இதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களும் அப்பிரதேசத்தில் மேலும் மண்சரியலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ள பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களும் இடம்பெயர்ந்து அயல் பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.



இவ்வாறு மீரியபெத்த தோட்டத்தின் குடும்பக் கட்டமைப்பில் மண்சரிவு அனர்த்த மானது பாரிய தாக்கங்கள் பலவற்றை தோற்றுவித்துள்ளது. மண்சரிவிற்கு முன்னர் காணப்பட்ட குடும்பக் கட்டமைப்பிற்கும், மண் சரிவிற்குப் பின்னர் காணப்படும் குடும்பக் கட்டமைப்பிற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நிலவுகின்றமை தெரியவருகின் றது. இன்று வரை மண்சரிவு ஏற்படுத்திய விளைவுகளிலிருந்து மக்கள் மீள முடியாது இருக்கின்றனர்.

**தெரிந்தே இடம்பெற்ற மனீத படுகொலை - அமைச்சர் சமந்த**

மீரியபெத்த மண்சரிவு மற்றும் அதன் தாக்கம் தொடர்பான கருத்தாடல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்ற நிலையில் தற்போதைய பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்த வித்யாரத்ன அண்மையில் தனியார் ஊடகம் ஒன்றுக்கு இவ்விடயம் தொடர்பில் கருத்து ரைத்திருந்தார்.



இது மண்சரிவால் ஏற்பட்ட அவலம் என்பதை விடவும் மனிதப்படுகொலை எனக் கூறுவதே பொருத்தம் என என்பதை தெளிவாக எடுத்துரைத்திருந்தார். அவர் தொடர்ந்து கருத்து ரைக்கையில் “ 2014 ஒக்டோபர் 29ஆம் திகதியே மீரியபெத்த மண்சரிவு இடம்பெற்றது. 36 பேர் பலியானார்கள். சிலரின் உடல்களை மீட்க முடியாமல் போனது. அக்காலப்பகுதியில் நான் ஊவா மாகாணசபை உறுப்பினராக செயல்பட் டேன்.

அனர்த்தத்துக்கு பின்னர், மண்சரிவு ஏற்படுமென முன்கூட்டியே எச்சரிக்கை விடுக் கப்பட்டிருந்ததா? என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் கேட்டிருந்தேன். குறித்த நிறுவ னத்தால் எனக்கு கடிதம் அனுப்பட்டிருந்தது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# திலீபனைக் கொன்றது யார்?

## பகுதி 2

புகழேந்தி தங்கராஜ்

முள்ளை முள்ளால் எடுத்த அந்த பத்திரிகையாளர், நக்கீரன் கோபால். *LAY OUT* நுணுக்கங்கள் தெரிந்தவர். கட்டிங், வெட்டிங் எல்லாம் செய்து, 'பிரபாகரன் சுட்டுக்கொலை' என்கிற செய்தி முதல் பக்கத்தில் வெளியாகி இருந்த நாளேட்டை பிரபாகரனே படித்துக் கொண்டிருக்கும் புகைப்படத்தை 'நக்கீரன்' அட்டையில் வெளியிட்டு பதிலடி கொடுத்தார். அந்த வார நக்கீரன் இதழ், மீண்டும் மீண்டும் அச்சடிக்கப்பட்டதெல்லாம் பழைய கதை.

இந்திய உளவுத்துறை ஒரு பொய்ச் செய்தியைப் பரப்ப திட்டமிட்டு முயன்ற போது, அது 'அப்பட்டமான பொய்' என்பதை எடுத்துச் சொல்ல அசாத்தியமான துணிவு வேண்டும். அது, கோபாலுக்கு இருந்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீதும், பிரபாகரன் மீதும் அவர் வைத்திருந்த நம்பிக்கை அதற்கு அடிப்படையாக இருந்தது.

கோபாலின் சமயோசித நடவடிக்கைக்குக் காரணங்கள் இருந்தன என்பதைக் குறிப்பிடும் போது, 'பிரபாகரன் சுட்டுக்கொலை' என்ற செய்தியைப் பரப்ப உளவுத்துறைக்கு என்ன காரணம் இருந்திருக்கும் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது.

1. மிக மிக வலுவான இந்திய ராணுவத்தை, ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் பல மடங்கு குறைந்த விடுதலைப் புலிகள் திணற வைத்ததற்கு முழுமுதற் காரணம், அவர்களது மனோதிடமும். தங்கள் தலைவர் பிரபாகரன் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையும்தான்! அந்த பிரபாகரனே உயிருடன் இல்லை என்றாகி விட்டால், அவர்களின் மன உறுதி குலைந்து விடக் கூடும். இந்த நோக்கத்துடனேயே, அப்படியொரு செய்தியை இட்டுக் கட்டியிருக்கலாம்.
2. ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், பிரபாகரனின் தலைமைக்கும். தமிழ்நாட்டில் அபரிமிதமான ஆதரவு இருந்தது. அமைதி காப்புப் படை என்கிற பெயரில் இந்திய ராணுவம் அனுப்பப்பட்டதற்கு தமிழ்நாட்டில் பரவலாக எதிர்ப்பு இருந்தது. அப்படி எதிர்த்தவர்களை அமைதியாக்க, இப்படி ஒரு பொய்ச் செய்தியை பரப்பியிருக்கலாம்.
3. பிரச்சினையைத் தீர்ப்பதைக் காட்டிலும், பிரபாகரனைத் தீர்த்துக் கட்டுவது தான் முக்கியம் என்று உயர் அதிகார வர்க்கம் நினைத்திருக்கலாம். தங்கள் அரிப்பைத் தீர்த்துக் கொள்ள. உறுதி செய்ய முடியாத ஒரு வதந்தியை உண்மையென்று அவர்கள் பிழையாகக் கருதியிருக்கலாம். அவசரப்பட்டு அதைச் செய்தியாக்கியிருக்கலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும், புலிகளையும், தமிழ்நாட்டு ஆதரவாளர்களையும் மட்டுமின்றி, பிரதமர் ராஜீவ் காந்தியையும், இந்தப் பொய்ச் செய்தி மூலம் ஏமாற்றப் பார்த்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மன்னிக்க முடியாது. எந்தப் பத்திரிகை, தங்களது புனை கதையை வரிக்கு வரி வெளியிடும் என்பது தெரிந்தே, அப்பத்திரிகைக்கு அந்தப் பொய்ச் செய்தியை அவர்கள் கொடுத்திருக்க வேண்டும். 'சுட்டுக்கொலை' என்று எட்டு கால தலைப்பில் செய்தி வெளியிட்டு மகிழ்ந்த அந்தப் பத்திரிகை, பிரபாகரன் உயிருடன் வெளிப்பட்ட பிறகு, தனது தவறான செய்திக்காக ஒரு வருத்தம் கூட தெரிவிக்கவில்லை. ஒரு சிக்கலான கால கட்டத்தில், இப்படி ஒரு பொய்ச் செய்தியை வெளியிட்டது ஏனென்று, அந்தப் பத்திரிகையை அதிகார வர்க்கம் கேட்கவுமில்லை.





அதன்மூலம், அவர்களுக்கிடையே யான கள்ளக்கூட்டு அம்பலமானது. இந்திய ராணுவமும் உளவுத்துறையும் தான் ராஜீவை வீழ்த்தின - என்கிற மணிசங்கர் அய்யரின் குற்றச்சாட்டு நியாயமானது என்பதை இதெல்லாம் உறுதி செய்கிறது.



இந்தியத் தரப்பின் தவறான முடிவுகள் - தீர்ப்புகள் குறித்தும் பேசியிருக்கிறார் அய்யர். இவையெல்லாம், சந்தேகத்துக்கு இடமின்றி வரலாற்று உண்மைகள். இதனை நிரூபிக்கிற நிகழ்வுகள் நிறைய! இரண்டை மட்டுமே குறிப்பிட்டால் போதுமானது. ஒன்று, திலீபனின் அறப்போர். இரண்டு புலேந்திரன். குமரப்பா உள்ளிட்டோரின் கைது.

திலீபனைப் பொறுத்தவரை, அந்த இளைஞன் கேட்டதெல்லாம், இந்தியா கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான். ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்ட, புதிய கோரிக்கை எதையும் திலீபன் முன்வைக்கவில்லை. தான் கொடுத்த வாக்குறுதிகளையே நிறைவேற்ற முடியாத நிலையில் இந்தியா இருந்ததற்கு இந்திய ஹை கமிஷனர் தீட்சித்தின் தமிழர் எதிர்ப்பு நிலையும், சிங்கள ஆட்சியாளர்களுடன் அவருக்கு இருந்த இணக்கமும் தான் காரணம்.

திலீபனின் கோரிக்கையை ஏற்று வாக்குறுதிகளை நிறைவேற்றினால், அது விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை பலப்படுத்தி விடும் என்று தீட்சித் கருதியது வெளிப்படை. காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய தனது பிழையான பார்வையால், திலீபனைக் கொன்றவர் அவர். இதில் சந்தேகமேயில்லை. திட்டமிட்டு கட்டம் கட்டியே திலீபனைக் கொன்றார் தீட்சித். புலேந்திரன், குமரப்பா உள்ளிட்டோரின் உயர்த்தியாகத்துக்கும், அந்த மனிதர், ராஜீவ் காந்தியின் ஒப்பந்தத்துக்குச் செய்த துரோகம் தான் காரணமாக இருந்தது. ராஜீவின் ஒப்பந்தத்துக்குத் துரோகம் செய்தது. ராஜீவுக்குத் துரோகம் செய்ததன்றி வேறென்ன!

சிங்கள அரசையும் தமிழர் தரப்பையும் சமமாக பாவிக்கும் மத்தியஸ்தராக இந்தியா இருந்திருக்க வேண்டும். ராஜீவ் காந்தி போட்ட ஒப்பந்தத்தின் நோக்கம் அதுதான். இரு பக்கத்தையும் சாராத, பக்கச் சார்பின்மை. இதற்கு நேர்மாறாக, இலங்கை இழுத்த இழுப்புக் கெல்லாம் வளைந்து கொடுத்து, பக்கச் சார்புடன் காய் நகர்த்திக் கொண்டிருந்தார்கள் தீட்சித்தும் அதிகார வர்க்கத்தினரும்!

இது ராஜீவின் நோக்கத்துக்கு எதிரானதாக இருந்தது. விடுதலைப் புலிகளையும் இந்திய படை களையும் எதிர் எதிர் நிலையில் நிற்க வைத்தது. இதைத்தான். சுற்றி வளைக்காமல், 'வீழ்த்தியது' என்று குறிப்பிட்டிருக்கிறார் அய்யர்.

J.N.தீட்சித் மட்டுமல்ல... நடந்த குளறுபடிகளுக்கும், துரோகத்துக்கும் காரணமானவர்கள் பலர். அவர்களில் ஓர் அதிகாரி, இப்போதிருக்கும் மோடி அரசில் அமைச்சராக இருக்கிறார். பிழை விட்ட உளவுத்துறை அதிகாரிகளில் ஒருவர். எப்போதாவது ஆங்கிலப் பத்திரிகைகளின் நடுப்பக்கக் கட்டுரைப் பகுதியில், 'நல்லவர்' போல் நாடகமாடிக் கொண்டிருக்கிறார்.



'இந்திய அதிகாரிகளில் சிலர் களத்தைத் தவறாகப் புரிந்து கொண்டனர் என்பது அய்யரின் இன்னொரு குற்றச்சாட்டு. "இந்திய அதிகாரிகளில் சிலர், களத்தைத் தவறாகப் புரிந்து கொண்டவர்களைப் போல் நடித்தார் கள்" என்பதுதான் உண்மை. இந்திய அமைதி காப்புப் படையின் தலைமைப் பொறுப்பில் இருந்த ஹர்கிரட் சிங், இலங்கைக்கும் ஈழத்துக்கும் புதியவர். ஈழத்தில் அடியெடுத்து வைத்த சில நாட்களிலேயே, களநிலவரத்தை அவர் புரிந்து கொண்டார். அதற்குக் காரணம் அவரது பக்கச் சார்பின்மை. அவரது நேர்மை.

இலங்கையிலேயே பழம் தின்று கொட்டை போட்ட தீட்சித் இதற்கு நேர்மாறாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# ஒற்றைத் துருவ உலக ஒழுங்கு

## போர் இன்றி முடிவுக்கு வருமா?

ஒற்றை துருவ உலக ஒழுங்கின் முடிவை ஏற்றுக்கொள்வதற்கு மேற்கு ஐரோப்பா போராடி வருவதால் அது ரஸ்யாவுடன் ஒரு நேரடி மோதலுக்கு தீவிரமாக தயாராகி வருவதாக ரஸ்யாவின் வெளிநாட்டு புலனாய்வு சேவையின்(S-RV) தலைவர் சேர்ஜி நரிஷ்கின் தெரிவித்துள்ளார்.



2022 ஆம் ஆண்டு உக்ரைன் போர் ஆரம்பமாகியதில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமது படைத்துறை செலவினங்களை அதிகரித்து வருகின்றன. தற்போது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் அழுத்தம் காரணமாக நேட்டோ உறுப்பு நாடுகள் தமது பாதுகாப்பு செலவினங்களை 2 தொடக்கம் 5 விகிதமாக அதிகரித்துள்ளன. 2030 ஆம் ஆண்டுக்கு முன்னர் 900 பில்லியன்டொலர்களை, அதாவது அமெரிக்காவின் மொத்த பாதுகாப்பு செலவினங்களுக்கு இணையாக தமது செலவினத்தை அதிகரிக்க இந்த நாடுகள் முன்வந்துள்ளன.

அதேசமயம், ஐரோப்பாவை ரஸ்யா எந்த நேரத்திலும் தாக்கலாம் என்ற செய்தியையும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. ஆனால் ரஸ்யா அதனை மறுத்து வருகின்றது. பிரித்தானியா பிரதமர், ஜேர்மன் அதிபர், பிரான்ஸ் அதிபர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் காஜா கல்லாஸ் போனவர்கள் கொண்டுவர முற்படும் தீர்வு என்பது ரஸ்யாவுடனான மோதலாகும். அதாவது நேட்டோ படையினரை களத்தில் இறக்குவதாகும்.



ஆனால் ஐரோப்பிய இளைஞர்களின் அக்கறையின்மை மற்றும் உயர்மட்ட அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையின்மை என்பது ஐரோப்பாவில் படைக்கு ஆட்களை தரட்டுவது கடினமானதாக இருக்கும். எனினும் போர் வெடித்தால் நேட்டோ சரத்து ஐந்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கா முன்வராது எனவம் நரிஷ்கின் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுவது போலவே ரஸ்ய அதிபருக்கும், அமெரிக்க அதிபருக்கும் இடையில் ஹங்கேரியில் இடம்பெறவிருந்த பேச்சுக்களையும் டொனால்ட் ட்றம்ப் நிறுத்தியுள்ளார். அது மட்டு மல்லாது ரஸ்யாவின் மிகப்பெரும் எரிசக்தி நிறுவனங்களான ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயிலை ஆகியவற்றை அமெரிக்கா தடை செய்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் தனது 19 ஆவது தடையை கொண்டுவந்த அதேசமயம் அமெரிக்காவின் தடைகள் கொண்டுவரப்பட்டது ஒரு இணைந்த நடைவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.




கடந்த வாரம் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற பேச்சுக்களில் உக்ரைன் அதிபரிடம் ரஸ்யாவுடனான பேச்சுக்களில் நிலங்களை விட்டுக்கொடுப்பது தொடர்பில் அமெரிக்க அதிபர் அழுத்தம் கொடுத்தபோதும், உடனடியாகவே ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் செலன்ஸ்கியை தொடர்பு கொண்டு முடிவை மாற்றியுள்ளனர். ரஸ்யாவின் பிராந்திய சலுகைகளை நிராகரிக்கும் 12 அம்ச அமைதித் திட்டத்தை முன்வைத்துள்ளனர். ட்றம்ப் தலைமையிலான அமைதி குழுவை உருவாக்கும் இந்த திட்டத்தை ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் அமெரிக்கா சென்று தெளிவுபடுத்தவுள்ளனர்.

எனினும் டோமாஹாக் ஏவுகணைகளை தற்போது உக்ரைனுக்கு வழங்கப்போவதில்லை என ட்றம்ப் தெரிவித்துள்ளார். அதனை பயன்படுத்த உக்ரைன் படையினருக்கு 6 மாதங்கள் எடுக்கும் எனவும் அமெரிக்க படையினர் அதனை இயக்கப்போவதில்லை எனவும் ட்றம்ப் தெரிவித்துள்ளார். அதேசமயம், தற்போது உக்ரைன் பயன்படுத்தும் ஏவுகணைகள் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது ஐரோப்பிய ஒன்றியத்தை ரஸ்யாவுடன் ஒரு போருக்கு தள்ளுவதையே ட்றம்பும் விரும்புகின்றார். ஆனால் அமெரிக்காவின் டோமாஹாக் ஏவுகணை என்பது அரை நூற்றாண்டுக்கு முன்னர் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டவை, தற்போது அதில் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டாலும், தற்போதைய கைப்ப

வேல்ஸில் இருந்து **அருஸ்**

சொனிக் மற்றும் சப்சொனிக் ஏவுகணைகளுடன் ஒப்பிடும் போது அவை பின்தங்கியதாகவே உள்ளது. அவற்றின் பயன்பாட்டில் அமெரிக்க படையினரின் பங்களிப்பு இருக்கும் என்பதால் அது போரை விரிவுபடுத்தும் என புட்டீன் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவின் டொமாஹாவ் ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தும் எஸ்-350 மற்றும் எஸ்-400 வகை ஏவுகணைகள் ரஸ்யா வசம் உள்ளது. எப்-16 விமானங்கள், பற்றியாட் ஏவுகணைகள், அப்ராம் டாங்கிகள் என்பன முன்னர் தெரிவித்தது போல போரின் போக்கை மாற்றவில்லை. அவ்வாறே இந்த ஏவுகணையின் கதையும் முடியலாம். மேலும் இந்த போரில் அணுவாயுதத்தை பயன்படுத்தாது விட்டாலும் உக்ரைன் போரின் நீட்சி அமெரிக்காவின் மூலோபாய தோல்வியாக முடியலாம். அது உலக அரங்கில் சீனாவின் மதிப்பை உயர்த்தலாம்.

எனவே போரின் போக்கை மாற்றாத டொமாஹாவ் ஏவுகணையை வழங்குவதன் மூலம் மேலும் பேரழிவை ஏற்படுத்த ட்றம்ப் விரும்பவில்லை என்பதை தான் கடந்த வாரம் வெளிவந்த வெள்ளைமாளிகை முடிவுகள் காட்டுகின்றன.

எனினும் கியேவில் டோமாஹாக் ஏவுகணைகளை நிறுத்தி வைப்பது பென்டகனில் உள்ள மூலோபாய முன்னுரிமைகளுடன் தொடர்புடையதாக இருக்க வாய்ப்புள்ளது.




ஆனால் ரஸ்யா தொடர்ந்து உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்புக்களை அழித்து வருகின்றது. உக்ரைன்படையினரும் விரைவாக முன்னணி நிலைகளை இழந்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக ஐரோப்பாவும், அமெரிக்காவும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன. அமெரிக்காவின் தேசிய கடன் தொகை 38 றில்லியனாக அதிகரித்துள்ளதாக அமெரிக்காவின் திறைசேரி தெரிவித்துள்ளது.

அதாவது ட்றம்பின் குறுகிய ஆட்சிக் காலத்தில் இரண்டு றில்லியன் மேலதிக கடன்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# பயங்கரவாதமற்ற துருக்கி: உள்ளக அமைதி முயற்சியின் வெற்றி

## பகுதி 1

தமிழில்: **ஜெயந்திரன்**

ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலமாக, துருக்கியின் அரசியல், சமூக, பொருண்மிய வாழ்வு பயங்கரவாதத்தின் நிழலில் இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது. குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியும் (PKK) சிரியா, ஈராக், ஈரான் போன்ற நாடுகளில் இருந்த அவர்களது கூட்டாளிகளும், பிரிவினைவாத வன்முறையினால் அந்தப் பிராந்தியத்தில் உறுதியான நிலை ஏற்படுவதற்கு அனுமதிக்கவில்லை. இந்த ஆண்டு மே மாதத்தில் பிகேகே அமைப்பு கலைக்கப்பட்ட நிகழ்வு, ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கொண்டு வந்த ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்தது மட்டுமன்றி, குறிப்பிட்ட பிராந்தியத்தின் எதிர்காலத்தை முற்றுமுழுதாக மாற்றக்கூடிய ஒரு அரிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.



முற்றுப்பெறாத போர்களும், குடிபெயர் மக்களின் தொடர் அதிகரிப்பின் காரணமாக ஏற்படும் அழுத்தங்களும், சக்தியைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு இடையே ஏற்படும் இழுபறிகளும் பூகோளத்தில் உறுதியற்ற ஓர் நிலையை உருவாக்கி வரும் இவ்வேளையில், துருக்கி எடுத்திருக்கும் இந்தக் காத்திரமான முயற்கள் நீண்டு நிலைக்கக்கூடிய சமாதானம், பாதுகாப்பான சக்திப் பாதைகள், என்பவற்றுடன் துருக்கிக்கும் அந்தப் பிராந்தியத்துக்கும் நிலையான செழுமை போன்றவற்றையும் கொடுக்கக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

### செலுத்தப்பட்டுள்ள மனித மற்றும் பொருண்மிய விலை

மனித உயிர்களாக இருந்தாலும் சரி, பொருண்மியமாக இருந்தாலும் சரி, இதற்காகக் கொடுக்கப்பட்ட விலை மிகப்பெரியது. 1980 களில் தொடங்கி, 2020கள் வரை, பல பத்து ஆண்டுகள் நீடித்த இப்போரில், 50,000 பேர் உயிரிழந்ததுடன், 1.1 மில்லியன் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர வைக்கப்பட்டுள்ளார்கள்.

துருக்கியைப் பொறுத்தமட்டில், பயங்கரவாதம் என்பது வெறுமனே பாதுகாப்புப் பிரச்சினையாக மட்டும் இருக்கவில்லை. அது ஒரு



பொருண்மியப் பிரச்சினையாக வளர்ந்து, ஒரு சமூகச் சுமையாகவும் வியாபித்தது. மக்கள் அனுபவித்த துயரங்களுக்கு அப்பால், பொருண்மிய ரீதியாகக் கொடுக்கப்பட்ட விலையும் மலைப்புக்குரியது. பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு 1.8 ட்றில்லியன் டொலர்கள் செலவு செய்யப்பட்டிருக்கின்றன என்று உத்தியோக பூர்வ மதிப்பீடு தெரிவிக்கிறது. இழக்கப்பட்ட பொருண்மிய வளர்ச்சி, முதலீடு, உல்லாசப்பயணத் துறை, கட்டமைப்புச் சேதாரம் போன்றவற்றைக் கணக்கில் எடுக்கும் பொழுது, இழப்பு 3 ட்ரில்லியனுக்கும் அதிகமாகின்றது.



இவை அத்தனைக்கும் எதிர்மாறாக சமாதானத்தைக் கண்ணோக்கும் போது, இவற்றுக்கு முற்றுக்கும் எதிர்மாறான நிலையே தோற்றம் பெறுகின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை இல்லாமல் செய்யும் பொழுது, தென்கிழக்குப் பிராந்தியத்தில் இடைக்காலத்தில், தனிமனித வருமானத்தில் கணிசமான அதிகரிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமன்றி, 198 செயற்றிட்டங்களை உள்ளடக்கிய 14 பில்லியன்கள் பெறுமதியான திட்டம் 2028இல் விவசாயம், உல்லாசப் பயணத்துறை போன்ற துறைகளில், 570,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கிப் பிரச்சினை தீர்க்கப்பட்டதில் உள்ள தனித்துவம் என்னவென்றால், அனைத்து மக்களும் சமூகத்தினுள் உள்வாங்கப்படுகிறார்கள். வெளிநாட்டு நடுவர்களில் தங்கியிருக்காமல், நாட்டின் சனநாய அமைப்புகளினால், நாடாளுமன்றத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சியாக இந்த முயற்சி போற்றப்படுகிறது.

வரலாற்று ரீதியாக, 20ம் நூற்றாண்டில் தேசிய அரசுகள் உருவாகியதைத் தொடர்ந்து, பல நாடுகளில் பிரிவினைவாத இயக்கங்கள் தோன்றி, அவற்றில் பெரும்பாலானவை பின்னர் பயங்கரவாதமாக மாற்றம் பெற்றன. உதாரணமாக, பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்த 'பெரிய வெள்ளி உடன்படிக்கை', பிரித்தானிய மற்றும் அயர்லாந்து நாடுகளின் இணைந்த முயற்சியால் உருவாகியதுடன், அமெரிக்கா மற்றும் கனடா போன்றவற்றின் மத்தியஸ்தத்தின் மூலம் ஏழு ஆண்டுகளில் இறுதிசெய்யப்பட்டது.

ஸ்பெயினில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளை உற்றுநோக்கும் பொழுது, ETA உடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சி, பன்னாட்டுத் தொடர்புக் குழுவாலும், கோவி அன்னான் (Gofi Annan) போன்ற ஆளுமைகளாலும் முன்னெடுக்கப்பட்டு, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ் ஆகியவற்றின் ஆதரவுடன் ஆறு வருடங்களுக்குள் முடிக்கப்பட்டது. இதே போல் எவ் ஏ ஆர் சியுடன் (FARC) கொலம்பியாவில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சி நோர்வே, கியூபா ஆகியவற்றின் ஊக்குவிப்பால் முன்னெடுக்கப்பட்டது.



இவை எல்லாவற்றுக்கும் முற்றிலும் எதிர்மாறாக, 2024ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அதிபர் எர்டோகான் முதல் தடவையாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததில் இருந்து, 2025 மே மாதத்தில் பிகேகே தமது அமைப்பைக் கலைக்கிறோம் என்ற அறிவிப்பை விடுத்து அடையாள ரீதியாக தமது ஆயுதங்களை எரித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். ஒரு வருடத்துக்குள்ளாக இவை அனைத்தும் நடைபெற்றது அண்மைக்கால அமைதிப்பேச்சுவார்த்தை முயற்சிகளைப் பொறுத்தவரையில் மிகக் குறுகிய காலமாகும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

### ஈழப்போர் ... தொடர்ச்சி ...

கிழக்கு முழுவதும் ஆச்சரியத்தை தந்திருந்தது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருக்கின்றதனால் உடனடியாக பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு மக்களை இடம்பெயருமாறு விடுதலைப்புலிகள் ஒலிபெருக்கி மூலமாக அறிவிப்பு விடுத்தனர்.

யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை 5 லட்சம். யாழ் குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த வெறும் இரண்டு வீதிகளினூடாக 5 லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து செல்ல வேண்டும் என்பதனை கற்பனை செய்தும் பார்க்க முடியாது. ஆனால் மக்களுக்கு அதற்கெல்லாம் நேரமிருக்கவில்லை. மூட்டை முடிச்சுக்களை கட்டி எல்லோரும் வீதிகளில் இறங்க இறுகிப்போனது வீதி.

அந்த இடப்பெயர்வு முடிந்து அடுத்த இரண்டு மாதங்கள் வரை யாழ்ப்பாணம் புலிகளின் கைகளில் தான் மீண்டும் இருந்தது. இடப்பெயர்வின் பின்னர் ஒரு பத்து பதினைந்து நாட்கள் வரை இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று பொருட்கள் எடுத்துவர அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் விடுதலைப்புலிகள். மீண்டு இராணுவம் யாழில் விடுதலைப் புலிகளுடன் ஆங்காங்கே மோதல் சம்பவங்களில் ஈடுபட்டதால் விடுதலைப்புலிகள் யாழ் குடா நாட்டில் இருந்த படைமுகாங்களை வன்னிக்கு நகர்த்தினர்.

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்துக்கான யுத்தம் ஈழப்போரை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாகவும், புலிகளால் மீண்டும் ஒருபோதும் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய யுத்தங்களை மேற்கொள்ள முடியாது எனவும் இராணுவம் அறிவித்தது. கிளர்ச்சி முடிவுக்கு வந்ததாக மக்களாலும்நம்பப்பட்டது.

1995 திசம்பர் 23ல், மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவப் பிரிவு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 33 படையினர் கொல்லப்பட்ட போது போர் முடிவுக்கு வரவில்லை என்பது உறுதியானது. அடுத்த ஏழு மாதங்களில் புலிகள் இயக்கத்தை மறுசீரமைத்து மீண்டும் ஒருங்கிணைத்தனர்.

யாழ்குடா நாட்டில் இருந்து வன்னி காட்டுக்குள் தமது படைகளை மீளவும் மறுசீரமைத்த விடுதலைப்புலிகள் தாம் யாழ் குடா நாட்டில் கற்றுக்கொண்ட பாடத்தை மீள் பரிசீலனை செய்து 1996 ஜனவரி 22ல் இலங்கை வான் படையினரின் M.J:17 உலங்குவானூர்தி பருத்தித்துறைக் கடலில் 39, படையினருடன் வீழ்ந்தசம்பவம், 1996, யூலை18ல், முல்லைத்தீவில் உள்ளபடைத்தளத்தின் மீது ஓயாத அலைகள் நடவடிக்கை என்ற பெயரில் தாக்குதலைத் தொடங்கினர். இந்த தாக்குதலில் 1,200க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் இராணுவ தளமும் அழிக்கப்பட்டது.

2000, மார்ச், 26ல் ஆனையிறவு இராணுவ முகாம் கைப்பற்றியது, இவ்வாறு இன்னும் பல வெற்றிகரமான தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஒரு கரந்தடி தாக்குதல் அணியாக தோற்றம் பெற்ற விடுதலைப்புலிகள் மரபுப்படையணியாக வளர்ச்சிபெற்று 2009 மே 18, வரையும் போராடி மௌனித்தனர். இலங்கை இராணுவத்தால் அவர்களை தோற்கடிக்காதபோதுதான் உலகநாடுகள் 32க்கு மேல் இலங்கைக்கு உதவியதன் நிமிர்த்தம் இறுதியில் முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்தது என்பதே வரலாறு.

ஈழப்போர் வரலாற்றில் 1987, 1990, 1995, ஆகிய மூன்று வருடமும் அக்டோபர் மாதமும் மறக்க முடியாத மாதமாகும்..

• • •

### சர்வதேச சட்டம் ... தொடர்ச்சி ...

இதனிடையே, அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் மார்கோ ரூபியோ, ஆக்கிரமிக்கப் பட்ட மேற்குக் கரையை இஸ்ரேலுடன் இணைப்பதற்கு எதிராக எச்சரித்துள்ளார், நெசெட் எடுத்த நடவடிக்கைகள் காசா அமைதி ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தல் என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காசாவில் இஸ்ரேலுக் கும் ஹமாஸுக்கும் இடையே ஒரு போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ஒரு வாரத்திற்குப்பிறகு, புதன்கிழமை(22), இஸ்ரேலிய அரசியல்வாதிகள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இணைப்பது தொடர்பான இரண்டு மசோதாக்களை முன்வைப்பதற்கு வாக்களித்துள்ளனர்.

அது இப்போது நாம் ஆதரிக்கக்கூடிய ஒன்றல்ல என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார் என்று நான் நினைக்கிறேன், மேலும் அது அமைதி ஒப்பந்தத்திற்கு கூட அச்சுறுத்தலாக இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். என்று ரூபியோ இணைப்பு பற்றி தெரிவித்துள்ளார்.

காசாவில் ஒரு உறுதிப்படுத்தல் படைக்கு துருப்புக்களையும், பணத்தையும் வழங்க அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ள பல அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இணைப்பது ஒரு சிவப்புக் கோடு என்று எச்சரித்துள்ளன.

### திலீபனைக் ... தொடர்ச்சி ...

இருந்தார். தனது ஒரு பக்க சார்பால் பிழையான முடிவுகளையே எடுத்தார். நேர்மையான பாரபட்சமற்ற அணுகுமுறைகளைப் புறந்தள்ளி விட்டு, இந்தியப் படையை இலங்கையின் கூலிப் படையாக மாற்றியது தீட்சித்தும், அவருடனிருந்த அதிகார வர்க்கமும் தான். ராஜீவின் நோக்கத்துக்கு நேர்மாறான, அவர்களது இந்த பிழையான நடவடிக்கைதான். இந்திய அமைதி காப்புப் படையின் வீழ்ச்சிக்கும், ராஜீவின் வீழ்ச்சிக்கும் வழி வகுத்தது. அவர்களின் இந்த சூழ்ச்சியைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ராஜீவ் காந்தி இருளிலேயே இருந்தது ஏன் என்பதை அய்யர் விளக்கவில்லை.

ஈழம் தொடர்பான இந்திய அதிகார வர்க்கத்தின் இந்தப் பிழையான போக்கு. இன்று வரை நீடிக்கிறது. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வரும்போதெல்லாம் அதை நீர்த்து போகச் செய்வதில் இந்திய அதிகாரிகள் தீவிரம் காட்டுகிறார்கள். வாக்கெடுப்பு சமயங்களில் தலைமறைவாகிவிடுகிறார்கள். 'தீட்சித் பார் முலா இன்றைக்கும் தொடர்வதையே இது காட்டுகிறது. அன்று திலீபனையும், புலேந்தி ரன் - குமரப்பாவையும் கொன்ற இந்தியா, இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால், தமிழ் மக்களுக்கு நாடு கிடைத்துவிடும் என்கிற பீதியாலேயே. நீதியையும் நியாயத்தையும் கொன்று கொண்டிருக்கிறது.

இலங்கை என்கிற சிங்கள நாடு இந்தியாவின் உண்மையான நண்பனாக ஒருபோதும் இருந்ததில்லை. இனியும் இருக்காது. ஈழம் என்கிற நாடு அமைந்தால். அதுதான் இந்தியாவின் உண்மையான நண்பனாகவும் பாதுகாப்பு அரணாகவும் இருக்கும். இந்த உண்மையை இந்தியா எப்போது உணருமென்று தெரியவில்லை. மணிசங்கர் அய்யரும் இந்த யதார்த்தத்தைப் பேசவில்லை.

• • •

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## புடினுடனான .. . தொடர்ச்சி ...

ரத்து செய்தேன்,'' என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பின்னர் புடினுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை ட்ரம்ப் நிராகரிக்கவில்லை. ஆனால் எப்போது அல்லது எங்கு ஒரு சந்திப்பு நடக்கக்கூடும் என்பதைக் குறிப்பிடாமல், எதிர்காலத்தில் நாங்கள் அதை செய்வோம், என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கருவூலத் துறை ரஷ்யா மீது கூடுதல் தடைகளை வெளியிட்ட சிறிது நேரத்திலேயே டிரம்பின் கருத்துக்கள் வந்துள்ளன, "சமாதான செயல்முறைக்கு அதன் தீவிர அர்ப்பணிப்பு இல்லாததை'' மேற்கோள் காட்டி. இந்த கட்டுப்பாடுகள் ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெஂஃப்ட் மற்றும் லுகோயில் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், புதிய தடைகள் உக்ரைன் மோதலில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை மாற்றுமா என்பது குறித்து தனக்கு உறுதியாகத் தெரியவில்லை என்று ட்ரம்ப் ஒப்புக்கொண்டார். "புடின் நியாயமானவராக மாறுவார் என்று நம்புகிறேன், மேலும் உக்ரைனின் விளாடிமிர் ஜெலென்ஸ்கியும் நியாயமானவராக இருப்பார் என்று நம்புகிறேன்,'' என்று அவர் கூறினார்.

குறிப்பிட்ட தேதி நிர்ணயிக்கப்படவில்லை என்றாலும், இரு தலைவர்களும் தொலைபேசியில் பேசிய பிறகு, புடின்-ட்ரம்ப் உச்சிமாநாட்டிற்கான திட்டங்கள் கடந்த வாரம் முதலில் அறிவிக்கப்பட்டிருந்தன..

அதேசமயம், ரஷ்யா-அமெரிக்க சந்திப்புக்கு முன்னதாக "தீவிரமான தயாரிப்புகள்'' இருக்க வேண்டும் என்று முன்னதாக கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார், இரு தலைவர்களுக்கும் இடையிலான உச்சிமாநாடு வீணாகக் கூடாது, ஏனெனில் இரு ஜனாதிபதிகளும் "ஒரு முடிவை அடையப் பழகிவிட்டனர் என்று வலியுறுத்தி யிருந்தார்.

இதனிடையே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யா மீதான 19வது தடைகளை ஏற்றுக்கொண்டுள்ளன, வங்கிகள், கிரிப்டோ பரிமாற்றங்கள் மற்றும் இந்திய மற்றும் சீன வணிகங்கள் மற்றும் மாஸ்கோவின் இராஜதந்திரிகளை குறிவைத்து, கூட்டமைப்பின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் காஜா கல்லாஸ் வியாழக்கிழமை(23) அறிவித்துள்ளார்.

புதிய கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்படுவது விரைவில் நடைபெறும் என்று ஊடகங்கள் பரவலாக செய்தி வெளியிட்டன, அங்கீகரிக்கப்பட்ட உரை எந்த மாற்றங்களுக்கும் உட்பட்டது அல்ல என்றும் அவை கூறின. உக்ரைனின் போர் முயற்சியை ஆதரிக்கும் முயற்சியில் அதன் மீது அழுத்தம் கொடுக்கும் மேற்கத்திய முயற்சிகள் பயனற்றவை மற்றும் சுய தீங்கு விளைவிப்பவை என்று மாஸ்கோ பலமுறை கூறியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் ஜூலை மாதம் அதன் 18வது சுற்று தடைகளை நிறைவேற்றியது, அதே நேரத்தில் 20வது சுற்று தடைகளுக்கான பணிகள் ஏற்கனவே நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெஂஃப்ட் மற்றும் லுகோயிலை குறிவைத்து அமெரிக்கா விதித்த புதிய கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து பிரஸ்ஸல்ஸின் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

## ஜி.எஸ்.பி.பிளஸ் ... தொடர்ச்சி ...

ஒருபுறம், ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை இழப்பது இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை வெகுவாகக் குறைக்கும்; மறுபுறம், சர்வதேசச் சாசனங்களை நிறைவேற்றுவதற்கான உள்நாட்டு அரசியல் சவால்களும், சட்டரீதியான தடைகளும் உள்ளன.

குறிப்பாக அமெரிக்கா போன்ற முக்கிய சந்தைகள் வரி விதிப்புகளை அதிகரிப்பதாக அச்சுறுத்தும் இச்சூழலில், ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை இலங்கைக்கு ஒரு காப்புக் கவசமாக இருக்கிறது.

எனவே, இலங்கை அரசாங்கம் தனது கொள்கை நிலைப்பாடுகளுக்கும், சர்வதேச இணக்கத்திற்கான அழுத்தங்களுக்கும் இடையில் சரியான சமநிலையைக் காணவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை இழப்ப தைத் தவிர்க்க வேண்டுமானால், வெறும் வாக்குறுதிகளுக்கு அப்பால் சென்று, 33சர்வதேசச்சாசனங்களின் 'திறம்பட்ட நடைமுறைப்படுத்தலை' உறுதியாக வெளிப்படுத்த வேண்டும். இதுவே இலங்கையின் ஏற்றுமதி மற்றும் பொருளாதார எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒரேவழியாகும்.

அவ்வாறான நிலையில், தற்போதைய தகவல்களின் பிரகாரம், எதிர்வரும், டிசம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐரோப்பிய ஒன்றியக் குழுவானது, புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் வரைபை பார்வையிடுவதற்கு ஆர்வமாக உள்ளது.

அதேபோன்று, ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்கான நீடிப்பினை வழங்குவதில் இலங்கை அரசாங்கத்துக்கு பச்சைக்கொடி காண்பிக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. ஆனால், புதிய உடன்பாடுகள் உட்பட தமது நிபந்தனைகள் அனைத்தையும் உள்ளீர்க்க வேண்டும் என்பதில் ஐரோப்பிய ஒன்றியம் கவனமாக இருக்கின்றது.

மேலும், பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதை தமிழ்த் தரப்புக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தற்போது சர்வதேச தரங்களுடன் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தினை அமுலாக்குவதற்கு எதிர்ப்பினை வெளியிடப் போவதில்லை என்பது முக்கியமான விடயமாகின்றது.

ஆக, ஐரோப்பிய ஒன்றியம் தன்நலனின் உறுதியாக இருக்கின்ற நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் எவ்வாறு அக்கட்டமைப்பை கையாளப் போகின்றார்கள் என்பது இங்கு எழுந்திருக்கும் பிரதான கேள்வியாகவுள்ளது.

• • •

## அமெரிக்க டொல .. . தொடர்ச்சி ...

எமிரேற்ஸ் உடனான சமீபத்திய ஒப்பந்தங்கள் அடங்கும். புதுதில்லி தற்போது அமெரிக்கா உட்பட பல நாடுகளுடன் இதே போன்ற ஒப்பந்தங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்த மாத தொடக்கத்தில், ஐக்கிய அரபு எமிரேற்ஸ் திர்ஹாம் மற்றும் இந்தோனேசிய ரூபியாவிற்கான குறிப்பு விகிதங்களை அறிமுகப்படுத்தும் திட்டங்களை இந்தியா அறிவித்தது, மேலும் இதுபோன்ற அனைத்து பேச்சுவார்த்தைகளிலும் ரூபாய் குறித்து இந்தியா தீவிரமாக விவாதித்து வருகிறது.

இந்தியாவில் உள்ள சில சுத்திகரிப்பு நிறுவனங்கள்டொலரைத்தவிர்த்து, சீனயுவானில் ரஷ்ய எண்ணெய்க்கு பணம் செலுத்துகின்றன. இந்த மாத தொடக்கத்தில், உள்ளூர் வங்கிகள் அண்டை நாடுகளில் உள்ள வணிகங்களுக்கு ரூபாயில் கடன் வழங்க அனுமதிப்பது மற்றும் முக்கிய வர்த்தக கூட்டாளிகளின் நாணயங்களுக்கு அதிகாரப்பூர்வ குறிப்பு மாற்று விகிதங்களை நிர்ணயிப்பது குறித்து ரிசர்வ் வங்கி முன்மொழிந்திருந்தது.

அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள், மேற்கத்திய நாடுகளின் தொடர்ச்சியான பொருளாதார மற்றும் நிதித் தடைகள் மற்றும் அமெரிக்க பணவியல் கொள்கைகள் போன்றன பல நாடுகள் அமெரிக்க டொலரை நம்பியிருப்பதைக் குறைக்க கட்டாயப் படுத்தியுள்ளன.

## அமெரிக்காவின் . .. தொடர்ச்சி ...

தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான பீட்டர் ஜி பீட்டர்சன் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாத நடுப்பகுதி யில் அமெரிக்காவில் கடன் $37 டிரில்லியனைத் தாண்டிய இரண்டு மாதங்களுக்குப் பிறகு இந்த மைல்கல் வருகிறது. 2024 நவம்பரில் கடன் $36 டிரில்லியனாகவும், அந்த ஜூலை மாதம் $35 டிரில்லியனாகவும் இருந்தது.

அமெரிக்க சட்டமியற்றுபவர்கள் தங்கள் "அடிப்படை நிதி கடமைகளை'' நிறைவேற்றத் தவறிவிட்டதாகக் அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரி மைக்கேல் ஏ பீட்டர்சன் கூறினார்.

மே மாதத்தில், மூடிஸ் மதிப்பீடுகள் அமெரிக்க அரசாங்கத்தின் கடன் மதிப்பீட்டை Aaa இலிருந்து Aa1 ஆகக் குறைத்தன. நிதிச் சந்தைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 200 சதவீதத்திற்கு மேல் அமெரிக்க கடன் அளவை பொறுத்துக்கொள்ளாது என்று 2023 ஆம் ஆண்டு பகுப்பாய்வில், பென் வார்டன் பட்ஜெட் மாதிரியின் பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் மிகவும் அழகான வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கடுமையான வரி குறைப்புகளின் காரணமாக, 2047 ஆம் ஆண்டுக்குள் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 200 சதவீதத்தை எட்டும் என்று பாரபட்சமற்ற காங்கிரஸ் பட்ஜெட் அலுவலகம் மதிப்பிட்டுள்ளது.

## வெள்ளைக் ... தொடர்ச்சி ...

பெற்ற போதைப்பொருள் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

"அண்மையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு விடயத்தை கூறியிருந்தார். 2009இல் இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பொதுமக்கள், விடுதலைப் புலியினர் சவேந்திர சில்வா வின் அனுமதியுடன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்''.

"அதனுடன்தொடர்புடையஅரசியல்வாதிகள், அப்போதிருந்த இராணுவத்திற்குரிய செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்ற னர்'' என்றும் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2009இல் இருந்து இன்னும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தவரே சரணடைந்த தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறியிருக்கின்றார்.

அவர்களுக்கான விசாரணைகளை கடந்த அரசாங்கமும் செய்யவில்லை, இந்த அரசாங்கமும் செய்யவில்லை என்று அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். இதனாலேயே தமிழ் மக்கள் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர்.

சர்வதேச விசாரணைகளின் மூலமே இதனுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள், அரசியல் வாதிகளை தண்டிக்க முடியும். உள்நாட்டு பொறிமுறை ஊடாக இவர்களை தண்டிக்க முடியாது. இதனாலேயே சர்வதேச விசாரணையை கோர வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றும் பாராளுமன்ற உறுப்பி னர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

### மகாநாசத்துக்கு .. . தொடர்ச்சி ...

தத்தை பாதுகாக்க வேண்டும்" என்ற பொறுப்பு சிங்கள மக்களுக்கும் சிங்களபௌத்தர்களுக்கும் ஒப்படைக்கப் பட்டுள்ளது என சிங்கள மக்கள் நம்புகின்றனர்.

இதனால், இந்த தீவில் மட்டும் சிங்கள பௌத்தர்கள் வாழ்கிறார்கள்; எனவே இந்த தீவை விட்டு சிங்களவர்கள் வெளியே செல்ல முடியாது. எனவே "நாங்கள் இந்ததீவை பாதுகாக்கவேண்டும், அதை எப்போதும்பாதுகாக்கவேண்டும்" என்பதே அவர்களின் அடிப்படை கருத்தாகும். ஆக, மகாவம்சத்தின் பெயரில் மகாநாசத்திற்காக அடிகோலி விட்டார்கள். அதுதான் உண்மை.

இந்த "தம்மதீப கருத்தாக்கம்" என்ற கருத்தாக்கத்தையும் இதை வைத்துக்கொண்டுதான் விளக்குகிறோம். அதற்குள், "பௌத்தத்தை பாதுகாப்பது, எங்களுடைய பொறுப்பு, எங்களுடைய கடமை" என்ற கருத்து இருக்கிறது.

ஆனால், இந்த கருத்தை வைத்து அரசர்களை அல்லது மகாவம்சத்தை பயன்படுத்தி ஏதாவது செய்ததாக நமக்கு எந்தசான்றுகளும் இல்லை. இலக்கிய ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

ஏனென்றால், மகாவம்சம் எப்போதோ எழுதப்பட்டிருந்தாலும், அதுபோன்ற ஆதாரங்கள் காணாமல் போய்விட்டது. உள்ளே இருந்த எதுவும் யாருக்கும் தெரியாமல் அழிந்து போய்விட்டது.

பிறகு, 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஜான்ஸ்டன் அதை கண்டுபிடித்தார். பின்னர் அதை பிரான்ஸ் அனுப்பி முதல்மொழிபெயர்ப்பு லத்தீனில் செய்யப்பட்டது. பின்னர் பிழைகள் கண்டறியப்பட்டு, பலர் தொடர்ந்து முயற்சி செய்தனர். இறுதியாக, 1912 ஆம் ஆண்டு கைகரின் மொழிபெயர்ப்பை ஏற்றுக்கொண்டு ஒரு நிலையான மொழிபெயர்ப்புஉருவானது.

கைகரின் மொழிபெயர்ப்புக்குப் பிறகும் பல சிங்கள அறிஞர்கள் அதே மொழிபெயர்ப்பை அடிப்படையாகப் பயன்படுத்தி பல மாற்றங்கள் செய்துள்ளனர். பிறகு, அவர்கள் திரும்பி பாளி மொழியில் மொழிபெயர்த்து மகாவம்சத்தை பிற்காலத்தில் கொண்டு வந்துள்ளனர்.

இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், மகாவம்சம் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. உண்மையில், 1956 ஆம்ஆண்டு சிங்கள மொழி மட்டுமே சட்டமாக்கப்பட்டது.

அப்போது, "ஆங்கிலத்தினுடைய ஏக போகத்தை தவிர்க்க, இந்த நாட்டின் சுதேசிய மொழியை கொண்டு வருகிறோம்" என்று எஸ்டிஆர்டி பண்டார நாயக்க உட்பட பலர் கூறினாலும், பதிலாக சிங்களத்தை மட்டும் அரசு நிறுவியது. பிறகுஏற்பட்ட சர்ச்சைகளால், "சிங்களமும் தமிழும்" என்ற நிலை உருவானது.

இதிலிருந்து ஒரு மரபு உருவானது: தமிழிலும், சிங்களத்திலும் அனைத்து சட்டங்களையும், அரச வெளியீடுகளையும் மொழிபெயர்க்கும் மரபு இருக்கின்றது. ஆனால், எல்லாவற்றையும் முழுமையாக செய்யவில்லை. அதே போல், மகாவம்சத்தையும் அரசு இதுவரை தமிழில் மொழிபெயர்க்கவில்லை.

• • •

### யாழ் மருத்துவ ... தொடர்ச்சி ...

கடமையைச் செய்து கொண்டிருக்கும்போதே ஈவு இரக்கமின்றி இந்த இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களோடு தம் நோய்க்கு மருந்து பெற மருத்துவமனையில் காத்திருந்த நோயாளிகள், அவர்களுக்குத் துணையாக வந்தவர்கள், பராமரித்த உறவினர்கள், பாதுகாப்புத் தேடி அங்கே தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் எனப் பலரும் இந்தியப் படையின் படுகொலைத் தாக்குதலில் பலியாயினர்.

மிலேச்சத்தனம் நிறைந்த மனித குலம் வெறுக்கத்தக்க இந்தத் தாக்குதல் மறு நாளான அக்டோபர் 22 ஆம் திகதியன்றும் தொடர்ந்தது.

22 ம் திகதியன்று காலையில் வெளியே நின்று சுடுவது மனிதாபிமானமுள்ள பாரதத் தாயின் படைகள்தானே என்றும் வெள்ளைக் கொடியுடன் போனால் உலக விதிகளின்படி நடப்பார்கள் சுடமாட்டார்கள் என்றும், நப்பாசையில் வெள்ளைக் கொடியுடன் வெளியேற முயன்ற ஊழியர்களும் இந்த இந்தியப் படைகளால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

சுமார் 36 மணி நேரத்திற்கும் மேலாக, அந்த உயிர்களைக் காக்கும் உயர் பணியிடம், மரண ஓலங்கள் நிறைந்து இரத்த வெள்ளத்தில் மிதந்தது. காட்டேரிகளின் கோரத் தாண்டவம் நடந்த மரணக் குகையாகக் கதி கலங்கிக் கிடந்தது அந்த வைத்தியசாலை.

தாக்குதல் முடிவுக்கு ஒருவழியாக இவர்களின் கோரத் தாண்டவம் நிறைவுக்கு வந்த போது, மருத்துவமனை வளாகம் முழுவதும் இரத்த மும்,சதைப் பிண்டங்களும்,சிதறிய உடல்களுமாகக் காட்சியளித்தது.

இக்கொலைக்களத்தில் சிக்குண்டு சுமார் 70 பேர் மருத்துவர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவ உதவியாளர்கள், நோயாளிகள் என அத்தனை பேரும் இப் படுபாதகப் படுகொலைச் செயலில் கொல்லப்பட்டதாகப் பதிவுகள் கூறுகின்றன.

சர்வதேச யுத்தவிதிகளும், மனித உரிமைச் சட்டங்களும், மனிதாபிமானமும் வெளிப்படையாகவே மீறப்பட்டதன் சாட்சியாக பாரத தேசத்தின் அமைதிப் படையின் கோரச் செயல்களின் அடையாளமாக இந்த நிகழ்வு வரலாற்றில் பதிவானது.

இந்நாள் ஒரு இனம் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்ட இனவழிப்பின் சாட்சியாக நினைவில் மாத்திரமல்ல நம் ஒவ்வொருவர் மனதிலும் பதிந்த தினமாக, ஈழப்போரில் நடந்த உச்சகட்ட மனித உரிமை மீறல்களைக் கண்முன்னே கண்டபோதும், மரணத்தின் வாயிலில் நின்ற போதும், மனிதாபிமானத்தையும், உயிர் காக்கும் தமது தொழில் தர்மத்தையும் உயிருக்கும் மேலாக மதித்துக் கடமை புரிந்தவர்களுக்கு நேர்ந்த துரோகத்தின் நினைவு தினமாகவும் தங்கள் உயிரைக் கொடுத்து, பல உயிர்களைக் காக்க முயன்ற அந்த மருத்துவத் துறையாளர்களின் உன்னத தியாகத்தையும் நினைவுகூரும் ஒரு புனித நாளாக நாம் நினைவேந்த வேண்டும்.

பாரதப் படை செய்த அமைதிப் பணியின் மனித உரிமை மீறல்கள் அந்த வைத்தியசாலையின் சுவர்களில் படிந்த குருதிக் கறைபோல் ஒருபோதும் எம் மனங்களில் அழிக்க முடியாத வரலாற்றுச் சாட்சியமாக நிற்கிறது, அதுபோல் எம் இனத்தின் மீது நடாத்தப்பட்ட ஸ்ரீலங்காப் படைகளின் மனித உரிமை மீறல்களுக்கும் இனப் படுகொலைகளுக்குமான நீதிக்காகவும் இவர்களின் ஆத்மாக்கள் எம்மோடு சேர்ந்து அமைதியாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும்.

• • •

### ஒற்றை துருவ ... தொடர்ச்சி ...

சேர்ந்துள்ளது. அது மட்டுமல்லாது அமெரிக்க கடந்த 24 நாட்களாக மூடப்பட்டுள்ளது. அமெரிக்காவின்வரலாற்றில் இது இரண்டாவது மிகப்பெரிய முடக்கமாகும். இப்போது மேற்குலகத்திற்கு இழக்கப்படும் தமது நிலையை தக்கவைக்க வேண்டும். அதற்கு பொருளாதாரம் முக்கியம்.

சீனாவின் பொருளாதாரத்தை முடக்குவது, அதனால் ஏற்படும் பாதிப்பை தடுக்க மாற்று வழிகளை தேடுவதை முதன்மையாக்கியுள்ளது அமெரிக்கா. எனவே தான் சீனாவின் அரிய வகை மூலப்பொருட்களின் தடையை மாற்றீடு செய்வதற்காக அவுஸ்திரேலியாவின் பிரதமர் அல்பானீஸை அழைத்து 58 பில்லியன் டொலர்கள் முதலீடுகளை மேற்கொண்டு கனிமப் பொருட்களை அகழும் பணிகளை மேற்கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

அதேசமயம், உக்ரைனுக்கு 150 கிறிபென் போர் விமானங்களை வழங்க சுவீடன் தயாராகி வருகின்றது. அதேசமயம் தன்னிடம் உள்ள எப்-16 விமானங்களை உக்ரைனுக்கு வழங்க பெல்ஜியம் முன்வந்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் அமெரிக்காவின் டோமாஹாக் ஏவுகணையும் வழங்கப்படலாம்.

ஒரு முழு அளவிலான போரை நடத்த அமெரிக்காவும் தயாராகி வருகின்றது. எனவே தான் ட்ம்பின் தற்போதைய தடைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தபோது உக்ரைன் போர் தற்போது ட்றம்பின் போராக மாறியுள்ளதாக ரஸ்யாவின் முன்னாள் அரச தலைவரும் பாதுகாப்புச் சபையின் பிரதித்த தலைவருமான மெடடேவ் தெரிவித்துள்ளார்.

அதாவது முன்னைய வரலாற்று காலங்களில் நிகழ்ந்ததுபோல ஒரு பெரிய போர் இல்லாமல் தற்போதைய ஒரு துரவ உலக ஒழுங்கு பல் துருவ உலக ஒழுங்காக மாறுமா என்பதை காலம் தான் தீர்மானிக்கும்.

### பயங்கரவாத ... தொடர்ச்சி ...

"கனிந்த கொள்கை" என்ற ஆக்கத்தில் பேராசிரியர் ஈரா வில்லியம் ஸாட்மான் குறிப்பிட்டதைப் போன்று, காலம் கனியும் பொழுது, அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் வெற்றிபெறுகின்றன. அமைதிப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக துருக்கியில் விடயங்கள் மிகவும் விரைவாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. அதே நேரம் அமைதி முயற்சி தொடர்பான விடயங்கள் எவ்வளவுக்கு முழுமையாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

#### அதிகாரங்கள் சந்திக்கின்றன

ஐரோப்பா, ஆசியா, மத்திய கிழக்கு ஆகியவை சந்திக்கின்ற ஓர் இடத்தில் துருக்கியின் புவியியல் அமைவிடம் பூகோளச் சக்திப் பாதுகாப்புக்கு அவசியமானதாகும். கிழக்கு மத்திய தரைக் கடலிலிருந்து மத்திய கிழக்கு ஊடாக, கோகஸஸ் மலைத்தொடர் ஊடாக கருங்கடல் வரை நீண்டு செல்லும் ஒரு பரந்த பூகோள வளைவின் மையமாக விளங்கும் துருக்கி, அனைத்தையும் இணைக்கும் மையமாகவும் சக்தியின் மையமாகவும் விளங்குகிறது. துருக்கியைச் சூழவுள்ள பிரதேசம் உலகின் மொத்த எண்ணெய் வளத்தின் 65 வீதத்தை யும் இயற்கை வாயுவின் 45 வீதத்தையும் கொண்டிருக்கிறது.

துருக்கியை ஊடறுத்துச் செல்லும் அனற்றோலியன் ஊடான இயற்கை வாயுக் குழாய்த்தொகுதி (TANAP) வருடாவருடம் 16 பில்லியன் கனமீற்றர்களை ஐரோப்பாவுக்கு வழங்குகிறது) TurkStream (31.5 கனமீற்றர்களை தென் ஐரோப்பாவுக்கு வழங்குகிறது) Baku-Tbilisi-Ceyhan (BTC) எண்ணெய் குழாய்த்தொகுதி (தினமும் 1.2 மில்லியன் பரல்களைக் காவிச் செல்கிறது) ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இவ்வாறான மூலோபாய இருப்பிடம் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான முக்கிய இலக்காகவும் இருந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது.

**தொடரும்...**

**நன்றி:** ***Aljazeera.com***

**மீரியபெத்த ... தொடர்ச்சி ...**

மீரியபெத்தயில் மண்சரிவு ஏற்பட்ட பகுதி அதி அபாய வலயமெனவும், அப்பகுதியில் உள்ள குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் எனவும் 2007ஆம் ஆண்டிலேயே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக பதில் வழங்கப் பட்டது.

அப்படியானால் ஏன்? மக்களை அங்கிருந்து வெளியேற்றவில்லை மாவட்ட செயலாளரிடம் வினவினேன். அதற்கு ஹல்துமுல்ல பிரதேச செயலாளருக்கு கடிதம் எழுதியவதாக பதில் வந்தது. ஹல்முதுல்ல பிரதேச செயலாளரிடம் வினவினேன், கிராம சேவகருக்கு கடிதம் அனுப்பட்டதாக பதில் கிடைத்தது. இதனையடுத்து கிராம சேவகரை நேரில் சென்று சந்தித்தேன்.

அங்கு முன்னர் இருந்த கிராம சேவகர் லயன்களுக்கு சென்று வெளியேறுமாறு அங்குள்ள மக்களை மூன்று தடவைகள் எச்சரிக்கை விடுத்திருந்தார் எனக் கூறப்பட்டது. ஆனால் லயத்தில் வாழ்ந்தவர்கள், தமக்கென காணி உரிமை இல்லாமல் - வருமானம் இன்றி எங்கு செல்வார்கள்? அவர்களுக்கு செல்வதற்கு இடமிருக்கவில்லை. கடந்த காலங்களில் அரச பொறிமுறை அவ்வாறுதான் இடம்பெற்றது. இறுதியில் 36 பேர் உயிரிழந்தனர். இது மண்சரிவு அல்ல, தெரிந்தே இடம்பெற்ற மனிதப் படுகொலையெனக் கூறி ஊவா மாகாணசபையில் பிரேரணையொன்றை கொண்டுவந்தேன். ஏனெனில் அங்குள்ள மக்கள் சாவார்கள் என்பது அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரியும்.” என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன. கருத்து வெளியிட்டிருந்தார்.

“எமது ஆட்சியில் இப்படியான நிலைமைக்கு இடமளித்துவிட முடியாது. மனசாட்சிக்கு விரோதமாக பணியாற்றவும் முடியாது” என்று அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் 2 ஆயிரத்து 56 பயனாளிகளுக்கு நிர்மாணிக்கப்படவுள்ளவீடுகளில், மண்சரிவுஅபாய வலயத்தில் வாழ்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. மீரியபெத்த மண்சரிவு சம்பவத்துக்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பதுளை மாவட்டத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 66.9 சதவீதம் மண்சரிவு ஏற்படக்கூடிய நிலப்பகுதியென அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தகவல் வெளியிட்டார்.

மீரியபெத்த மண்சரிவு அனர்த்தமும் அதற்கு முன்னரும் பின்னரும் ஏற்பட்ட பல அனர்த்தங்களும் மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலில் உள்ள ஆபத்தை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. அந்த மக்களுக்கான காணியுரிமை இன்றளவும் வெறும் பேசு பொருளாகவே உள்ளது. மீரியபெத்த சமூக கட்டமைப்பில் மண்சரிவு ஏற்படுத்திய பாதிப்பு அம்மக்களுக்கு எதிர்காலம் பற்றிய பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீரியபெத்த மக்களுக்கு மட்டுமின்றி ஒட்டு மொத்த மலையக சமூகத்திற்கே ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் பெரும்பயத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அனர்த்தம் பௌதீக காரணிகளால் ஏற்பட்டாலும் இதிலிருந்து மனித உயிர்ச் சேதங்களையும், சொத்துக்கள் சேதங்களையும் குறைக்க மனிதக் காரணிகளே தடையாக இருந்துள்ளன. இன்றளவும் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டத்துக்காக ஒதுக்கப்படும் காணி தொடர்பில் பாரிய சர்ச்சை நிலவுகிறது. பெருந்தோட்ட நிறுவனங்களால் தேயிலை உற்பத்தியை மேற்கொள்ள முடியாத காடுகளாக மாறியுள்ள காணி, வீடு அமைப்பு திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. சில பகுதிகளில் அவ்வாறான காணிகளை பெற்றுக் கொள்வதற்கும் தடை நிலவுகிறது. பெருந்தோட்டத்துக்காக உழைத்து உரமாகும் அந்த மலையக மக்களுக்கான வீடமைப்புக்கு பாதுகாப்பான காணியை வழங்குவது அரசாங்கம் மாத்திரம் இன்றி தோட்ட நிறுவனங்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒவ்வொரு தரப்பினரதும் பொறுப்பாகும்.

• • •

**சாண் ஏற ... தொடர்ச்சி ...**

குற்றங்கள் அமைப்புசார் குற்றங்கள் என்பதை மனிதவுரிமை பேரவையால் கொண்டு வரப்பட்ட “இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் விசாரணை (OISL) அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையின் ஒட்டுமொத்த அரச இயந்திரமும் சிங்கள பௌத்த பேரினவாதத்தில் ஊறித் திளைத்ததாக இருப்பதால் தற்சார்பான பொறிமுறை என்பதற்கு உள் நாட்டில் இடமே இல்லை.

கடந்த 16 ஆண்டுகளாக இலங்கையில் நான்கு தடவை நான்கு வெவ்வேறு கட்சிகள் ஆட்சிகளில் தொடர்ந்தன. ஆனால், பொறுப்புக்கூறல் தொடர்பில் எவ்வித முன் னேற்றமும் இல்லை. ஏனெனில் சிறிலங்கா அரசுக்கு தமிழர்களுக்கான நீதியை உறுதிசெய் வதற்கான மனோநிலை இல்லை.

ஆயினும் மனிதவுரிமை பேரவை தொடர்ந்தும் உள்நாட்டுப் பொறிமுறையை வலியுறுத்திக் கொண்டிருப்பது இலங்கை அரசு மீதான நம்பிக்கையின் அடிப்படையில் இல்லை ஐநா மன்றம் என்ற வகையில் அதிலுள்ள அரசுகள் தத்தமது புவிசார் நலன்களுக்கு ஏற்ப முடிவு எடுக்கின்றன. எனவே, இலங்கை அதன் குற்றங்களில் இருந்து பாதுகாப்பதில்தான் தமது புவிசார் நலன்கள் இருப்பதாக பெரும்பாலான அரசுகள் கருதுவதால் இத்தகைய நீர்த்துப் போன தீர்மானங்கள் வருகின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரை நீதிக்கான போராட்டத்தில் சோர்வடைந்து விட வேண்டியதில்லை. ஈழத்தில் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு நீதி கோருவதையும் கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்பை தடுத்து நிறுத்துவதையும் முதன்படுத்தி ஓரணியில் திரள வேண்டும்.

இன்றைய உலக ஒழுங்கின் யதார்த்தத்தை புரிந்து கொண்டு இதில் பொருந்திப் போகக்கூடிய வகையிலும் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஈழத்தமிழர்கள் தமது உத்திகளை வகுத்துக்கொண்டு புதிய சிந்தனையுடன் தம்மை வலுப்படுத்தி கொள்வதில்தான் அடுத்தக் கட்ட முன்னேற்றம் தங்கியிருக்கிறது. எனவே, தமிழர்கள் தம்மை தாமே ஒருங்கிணைத்துக் கொள்வதே இப் போதைய உடனடி, அவசர பணியாகும் இதற்கு ஈழத்தில் இயங்கும் தமிழ்தேசிய கட்சிகளும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் ஒரு நேர் கோட்டில் ஒரு புள்ளியில் ஒற்றுமையாக இணைந்து பயணிப்பதே காலத்தின்தேவை•







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்





